விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 19 சனிக்கிழமை (04.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி;
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

நுண்கடன்களை பெற்ற

## 75 ஆயிரம் பெண்களின் கடன்கள் அரசால் இரத்து

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் ஒரு இலட்சம் ரூபாய் உச்ச வரப்பிற்குட்பட்ட நுண்கடன்களை பெற்ற 75 ஆயிரம் பெண்களின் கடன் தொகை இரத்து செய்யப்படுவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

லங்கா மைக்ரோ பினான்ஸ் பிரக்டிக்கல் அசோஸியேசன் நிறுவனத்தில் அங்கம் பெற்ற நுண்நிதி கம்பனிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் கடன்பெற்ற பெண்களுக்கு இந்த சலுகை கிடைக்கிறது என அமைச்சர் 02

யாழில் கஞ்சாவுடன்

## 4 இளைஞர்கள் பொலிஸாரால் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

விற்பனை செய்யும் நோக்கில்கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். 02

## பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சினைகளை கல்வி மூலம் தீர்க்க முடியும் - ஜனாதிபதி

(கொழும்பு)

கல்வியின் மூலம் ஒரு நாட்டிலுள்ள பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம்சுவர்ணபாலி வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கல்வியின் மூலமே ஒரு மனிதனிடம் சிறந்த ஒழுக்க பண்பாடுகள் உருவாகின்றன. கல்விக்காக 04

கரையோர பிரதேசங்களில்

## காற்றின் வேகம் அதிகரிக்கலாம்!

(கொழும்பு)

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகள் மற்றும் மன்னாரிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய 23

யாழ். மாநகரசபை அமர்வில் பங்கேற்க

## மணிவண்ணனுக்கு இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், யாழ் மாநகர சபையின் உறுப்பினருமான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை மாநகர சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கும், வாக்களிப்பதற்கும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று 24

## 194 பட்டதாரிகளுக்கு நாளை ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-ம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 194 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடை 23

நாடு முழுவதும் மருத்துவர்களின்

## பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி

(கொழும்பு)

சிங்கப்பூர் கூட்டு உடன்படிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் அரச மருத்துவ அதிகாரிகள் நேற்று காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 23

## போர்க்குற்றச்சாட்டில் ஜேர்மனியில் முன்னாள் புலி உறுப்பினர் கைது

(பேர்லின்)

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஜேர்மனியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஜேர்மனியின் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட படையினர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. 04

ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்றாலும்

# அமைதியும் சமாதானமும் மக்களிடையே இல்லை!

பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் கூட்டமைப்பின் தலைவர் எடுத்துரைப்பு



(கொழும்பு) ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்றிருந்தாலும் முழுமையான அமைதியும் சமாதானமும் மக்களிடையே ஏற்படவில்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் எடுத்துரைத்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

அடாவடியில் ஈடுபட்ட

## இரு இளைஞர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராம அலுவலரை தாக்கியமை மற்றும் கொக்குவிலில் மூன்று வீடுகளுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் இருவரின் விளக்கமறியலை வரும் 17-ம் திகதி 04

## சர்வதேச அழுத்தங்களில் இருந்து படையினரை தற்போதைய அரசே விடுவித்துள்ளது: ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் நாட்டை துண்டாடுவதற்கோ காட்டிக்கொடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு பின்னரும் ஒரு போதும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

படையினரை சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுவித்தது தற்போதைய அரசாங்கமேயாகும் என்று நேற்று முன்தினம் பிற்பகல் மன்னம்பிட்டிய நகரில் ஹெலபொஜுன் தேசிய உணவகத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணி 04

## இலக்கை அடைய இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப்படும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுதி



(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலின் கேந்திரமாக மாறும் இலக்கை, இலங்கை அடைவதற்கு ஆதரவு அளிக்கப்படும் என்று சீன 02

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு - முகத்துவாரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 23

## வீடொன்றுக்குள் புகுந்து வாள்வெட்டு குழு அடாவடி



வன்முறையில் ஈடுபட்டோர் பயணித்த கார் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட வாள்வெட்டுக் கும்பல் தப்பித்துச் சென்ற கார் மீட்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் 23

## வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி நான்கு வீதமாக உயரும்!

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ் ஆண்டின் முடிவில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் நான்கு சதவீதமாக உயரும் என எதிர்வு கூறியிருக்கும் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி பணவீக்கம் கடந்த வருடத்தை விட இவ்வருடம் குறைவடைந்துள்ளமையால் மிதமான நிலை பேணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாணயச்சபையின் மீளாய்வுக்கூட்டத்தொடர் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்று மத்திய வங்கியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மத்திய வங்கி ஆளுநர் இதை தெரி 02

## 4 இளைஞர்கள் பொலிஸா...

யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியை சேர்ந்த 24 வயதுடைய நபரிடம் இருந்து 160 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அரியாலை பகுதியில் வைத்து 250 கிராம் கஞ்சாவுடன் மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.(ம)

## வருட இறுதிக்குள் பொரு...

வித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,

நாணயச்சபை வட்டி வீதங்களை மாற்றமின்றிப் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளதோடு, பணவீக்கத்தை எதிர்வரும் காலத்தில் மேலும் கட்டுப்படுத்த எதிர்பார்த்துள் ளது. அத்தோடு இவ்வருடம் மே மாதம் வரையான காலப்பகுதியில் இறக்குமதிக் கான செலவினத்தை விடவும் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளமையால் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை நிலை தோன்றுவதை குறைந்துள்ளது.

பணவீக்கம் இவ்வருடம் ஜுலை மாதத்தில் 5.4 சதவீதமாக பதிவாகியுள்ள போதிலும் இவ்வருட இறுதிக்குள் இதனைப் பெருமளவு குறைக்க முடியும். வெளிநாடு களிலிருந்து மோட்டார் வாகனம், தங்க ஆபரணம் மற்றும் எரிபொருள் என்பவற்றின் இறக்குமதி அதிகரித்துள்ளது. நாட்டின் போக்குவரத்து முறைமை சீரமைக்கப்பட்ட பின்னர் இவ்வருடம் மே மாதம் வரை 6.9 சதவீதமாக உள்ள மோட்டார் வாகன இறக்குமதி பெருமளவில் குறைவடையும் என்றார். (ம)

## 75 ஆயிரம் பெண்களின்...

குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போது, பாதிக்கப்பட்ட பெண்களின்கடன் தொகையை இரத்துச் செய்து நிவாரணம் வழங்க அரச ஒன்று முன்வருவது இதுவே முதற்தடவை என அவர் கூறினார். (ம)

## இலக்கை அடைய...

கம்யூனிஸ்ட் கட்சி உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின், அனைத்துலக திணைக்கள உதவி அமைச்சர் கோ யேசோ இலங்கை பிரதமரை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது இந்த உறுதிமொழியை அளித்துள்ளார். அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும், கோ யேசோவும் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துரையாடினர். (ம)

### கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை-2018

**ஒப்பந்த இல:** NP/14/41 (15)/2/5/PSDG/2018/Street Light

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016 (1) இற்கமைவாக வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டு ள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படு வதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். (T.P : 0212240017 / 0212244045, Fax :0212240327) அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் **06.08.2018** தொடக்கம் **20.08.2018**ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2500/- **(NBT, VAT தவிர்ந்த)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05.பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து **20.08.2018**-ம் திகதி பி.ப **2.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் **14.08.2018** ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07.கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 49 நாட்கள் வரையும் செல்லுபடியாகும்

08.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீதி விளக்கு கொள்வன்வு செய்தல் | 0.35 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 5000.00 | 08.10.2018 |

தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

(சி-3431)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
1952 - 02 - 05



உதிர்வு
2018 - 07 - 05

### கிருஷ்ணசாமி வெற்றிவேலாயுதம்

கடந்த 2018.07.05 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கிருஷ்ணசாமி வெற்றிவேலாயுதம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (2018.08.04) சனிக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு உடன் ஓடி வந்து துயரத்தில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசி வாயிலாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டவர்களிற்கும் மற்றும் எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(5259)

48/9 சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்
0770869328

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சரோஜினிதேவி தர்மலிங்கம்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.10.1953 | 04.08.2011 |

என்றென்றும் உங்கள்
நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

(C-3429)


## செவிப்புலனுக்கான முழுமையான தீர்வுகள்

**"இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளைப் பொருத்திப் பரீட்சித்தல்"**

**நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட கேட்க வைக்கும் கருவிகள்**

| Behind the ear (BTE) | Ultra Small BTE | Moxi Kiss BTE | Completely in the ear (CIC) | Micro CIC | Full Shell | Half Shell and Canal |
|---|---|---|---|---|---|---|





நல்லூர் உற்சவ தினங்களை முன்னிட்டு இலவச கண் பரிசோதனை மற்றும் **காது கேள் கருவிகளுக்கு 05-10%** விலைக் கழிவுகளும்



**மூக்குக் கண்ணாடிகளுக்கு** 20-30% விலைக்கழிவுகளும் வழங்கப்படும்.

மற்றும் இலவச கண்பார்வை பரிசோதனை ( Free Vision Test )
தெரிவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் மற்றும் காதுகேள் கருவிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்.
(நிபந்தனைக்குட்பட்டது)

**J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி**
No.178, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
**021 221 9288 / 021 222 8109**

# நல்லாட்சியை கவிழ்க்க மகிந்த கனவிலும் நினைக்கக்கூடாது

## ஐ.தே.க. அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு



(கொழும்பு)

அனைத்து இன மக்களும் நல்லாட்சியின் பக்கமே உள்ளனர். எனவே போராட்டங்களின் ஊடாக தேசிய அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என மகிந்த ராஜபக்ஷ கனவில் கூட நினைக்கக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களின் ஊடாக ஜனநாயக முறையில் உருவாக்கிய தேசிய அரசாங்கத்தினை ஒருபோதும் வீழ்த்த முடியாது. 2015 ஆம் ஆண்டு இன,மத வேறுபாடுகளைத் தாண்டி நல்லாட்சி அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இன்றுவரை தேசிய அரசாங்கம் ஜனநாயக முறையிலே செயற்படுகின்றது. கடந்த அரசாங்கத்தினைப் போன்று சர்வாதிகார ஆட்சியினை செயற்படுத்தவில்லை.

அரசாங்கத்திற்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரது சகாக்கள் மாத்திரமே கலந்துகொண்டனர். இவர்கள் யார்? எத்தன்மை கொண்டவர்கள் என்ற விடயத்தை சிறந்த அரசியல் கொள்கை கொண்ட மக்கள் நன்கு அறிவார்கள்.

அத்துடன் அரச வைத்திய சங்கத்தினர் அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்படக்கூடாது புனிதமான வைத்திய சேவைக்கு மாத்திரமே அரசாங்கத்துடன் ஒன்றிணைய வேண்டும். அரசியல் விடயங்களை மையப்படுத்தி பொதுமக்களை துன்புறுத்துவது அவர்களின் சேவைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் அகிலவிராஜ் தெரிவித்தார். (இ-7)

## உலக நன்மைக்காக பிரதமர் ரணில் திருப்பதியில் வழிபாடு

### இந்திய மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகவும் தகவல்







(திருப்பதி)

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி தரிசனம் செய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் நேற்று முன்தினம் மாலை சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

பின்னர் அங்கிருந்து இந்திய விமானப்படையின் சிறப்பு ஹெலிகொப்டரில் ரேணிகுண்டா விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆந்திர அரசு சார்பில் அமைச்சர் சுஜயா கிருஷ்ணரங்காராவ் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர் திருப்பதிக்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டார். இரவு கிருஷ்ணா விருந்தினர் மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தங்கினார்.

இந் நிலையில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் ஏழு மலையானை பிரதமர் ரணில் தரிசனம் செய்தார்.

கோவில் கொடி மரத்தை தொட்டு வணங்கி தரிசனம் செய்த பிறகு, ரங்கநாயகர் மண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவியை அமர வைத்து லட்டு பிரசாதம், தீர்த்தம் மற்றும் ஏழுமலையானின் படத்தை தேவஸ்தான அதிகாரிகள் வழங்கினர்.

பிரதமர் வருகையை முன்னிட்டு திருப்பதி மற்றும் திருமலை பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏழுமலையான் தரிசனத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு 2 ஆண்டுகளுக்கு பிறகு வந்துள்ளேன். நல்ல முறையில் தரிசனம் நடைபெற்றது. உலக நன்மைக்காக சுவாமியை வேண்டிக் கொண்டேன். இந்திய மீனவர்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல் நலம் குறித்து ஸ்டாலினிடமும் கனிமொழியிடமும் தொலைபேசியில் உரையாடி உடல் நலம் குறித்து விசாரித்ததாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## மாணவர்களின் தொலைபேசிப் பாவனையில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி அறிவுரை



(கொழும்பு)

மாணவர்களின் தொலைபேசிப் பாவனை தொடர்பாக பெற்றோர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவை, திவுலங்கடவல மத்திய மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டடத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடமாக நாங்கள் பாடசாலையைக் கருதுகின்றோம். பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு இடையூறுகள் ஏற்படுவது மிகவும் குறைவு.

பிள்ளைகளுக்காக அரசாங்கத்தினால் வழங்க முடியுமான அனைத்து வளங்களையும் பெற்றுக்கொடுப்பதைப் போன்று அதிபர்கள், ஆசிரியர்கள் அவர்களது பொறுப்புக்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றுகின்றார்கள் என்று நான் நம்புகின்றேன். சிறந்த ஒழுக்கப் பண்பாடுடைய பிள்ளைகளை சமூகத்திற்கு அளிப்பதில் தற்கால சவாலை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வெற்றி கொள்ள வேண்டும்.

இன்று தொழில்நுட்பத்துடன் இணைந்த ஒரு போட்டித்தன்மையான சமூகம் காணப்படுகின்றது. தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பாரிய போட்டியொன்றில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தப் போட்டி மனப்பாங்கினால் பெற்றோருக்கு பிள்ளைகள் பற்றிய கவனம் குறைவடைந்துள்ளது. பிள்ளைகள் விட்டுக்கு வெளியில் இருக்கின்றபோது இருக்கும் அதே கவனம் வீட்டினுள் இருக்கின்றபோதும் அவசியமாகும்.

எனவே போதைப்பொருளும் கைத்தொலைபேசியும் பிள்ளைகளை அழிவுக்குள்ளாக்கி வருகின்றன.

கைத்தொலைபேசிகளை உருவாக்கியவர்கள் அதனை தொடர்பாடல்களை இலகுபடுத்துவதற்காகவே உருவாக்கினார்கள். என்றாலும் அதனை இன்றுள்ளவர்கள் பிழையாக பயன்படுத்த ஆரம்பித்திருக்கின்றார்கள்.

எனவே நீங்கள் பெற்றோர்கள் என்ற வகையில் பிள்ளைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (இ-7)

## அரச வைத்திய அதிகாரிகளின் போராட்டத்திற்கு அரசே பொறுப்பு

### பந்துல குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்று கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், வைத்தியர்களின் வேதன உயர்வு மற்றும் இடமாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தே அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவை தொடர்பாக ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி அரசாங்கம் தனது அடுத்தடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு மக்கள் தேவையை நிறைவேற்றும் நோக்கம் இல்லை. ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கத்தின் அடிப்படையிலேயே அரசாங்கமும் செயற்படுகின்றது.

ஆட்சியைப் பொறுப்பேற்று மூன்றரை வருடங்கள் நிறைவடைந்தும் எதனையும் செய்ய முடியாத அரசாங்கம் எஞ்சியிருக்கும் குறுகிய காலத்தில் மக்களைக் கொன்றேனும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே எதிர்பார்க்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு

## இறைச்சிக்கடைகளை 2018ஆம் ஆண்டுக்கான குத்தகை வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கூறல்

கரைதுறைப்பற்றுபிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் இறைச்சிக் கடைகளை 2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதிமுதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோரப்படுகின்றது.

பற்றுச்சீட்டு வழங்கப்படும் காலம் :- 03.08.2018 தொடக்கம் 09.08.2018 பிப 3.00 மணிவரை

ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமை அலுவலகம்

ஏலம் கூறப்படும் நேரம் :- 10.08.2018 முற்பகல் 9 மணி

**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்**

01 ஏலத்தில் பங்குபற்றவிரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் நேரடியாக வருகை தரவேண்டும்.

02 ஏலத்தில் பங்குபற்றுபவர் கீழ் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படக்கூடிய, வைப்புக்கான கட்டணத்தை குறித்தநேரத்துக்குள் காசாக செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் அத்துடன் கட்டணத்தை செலுத்தும்போது கரைதுறைப் பற்று பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03 ஏலத்தில் தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 02மாதங்களுக்கான குத்தகை தொகையினையும் இறைச்சிக்கடைக்கான பாதுகாப்பு வைப்பாக 10.08.2018 ஆண்டு பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சபையின் தலைமை அலுவலகத்தில் காசாக செலுத்தி உடன்படிக்கை செய்தல்வேண்டும்.

04 மேலும் தெரிவு செய்யப்படும் ஏலதாரர் சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

05 இதற்கு மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| இல | விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா. | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| 1 | கொக்கிளாய் கோழி இறைச்சிக் கடை | 3000.00 | - | 43500.00 |
| 2 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக் கடை | 5000.00 | - | 85000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக் கடை | 3000.00 | 1000.00 | 37600.00 |
| 4 | கேப்பாப்பிலவு மாட்டிறைச்சிக் கடை | 2000.00 | 1000.00 | 6100.00 |

க.தவராசா, தவிசாளர்,
கரைதுறைப்பற்றுபிரதேசசபை, முல்லைத்தீவு.

# பொருளாதார...

முடியுமான அனைத்து வசதி வாய்ப்புக் களையும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங் கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, சந்திராணி பண்டார, வட மத்திய மாகாண ஆளுநர் எம்.பி.ஜயசிங்க, பாடசாலை அதி-பர் ரமணிவாசல ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், அநுராதபுரம் தீபானி மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறை கட்டிடத்தை யும் ஜனாதிபதி நேற்று மாணவர்களிடம் கையளித்திருந்தார். (ம)

# போர்க்குற்ற...

ஜேர்மனியின் Duesseldorf பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட பி. சிவதீபன் என்ற விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் நேற்று முன்தினம் நீதிக்கான சமஷ்டி நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டார்.

இதன்போது, அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தும் வாய்ப்பு இருப்பதன் அடிப்படையில் - ஜேர்மனியின் தனியுரிமை சட்டத்தின் கீழ், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

# இரு இளை...

வரை நீடித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

முறைப்பாட்டாளரின் வாக்குமூலத்துக்கு அமைவாக ஒருவர் கைது செய்யப்பட்டது டன், மற்றையவர் சிசிரிவி காணொளிப் பதி வின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி வேறு நீதிமன்றில் முன்னிலையாவதால் இந்த மன்றில் முன்னிலையாக முடிய வில்லை என்றும் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

அதனை ஆராய்ந்த மன்று சந்தேக நபர்களின் விளக்கமறியலை நீடித்து வழக்கு களை வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத் தது. (ம-111)

# சர்வதேச...

களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் தெரிவித்தார்.

இங்கு மேலும் ஜனாதிபதி உரையாற்று கையில்,


நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாம் என்றும் இராணுவத்தினரை பாதுகாருங் கள் என்றும் கோரி காலாவதியான கோசங் களை கூறிக்கொண்டு சில அரசியல்வாதி கள் லிப்டன் சுற்று வட்டாரத்தில் இருந்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக வேயாகும் .

அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்க ப்படுகின்ற எந்தவொரு கோசமும் இன்று செல்லுபடியானவை அல்ல என்றும், அன்று குறிப்பிடப்பட்ட மின்சாரக் கதிரை சர்வதேச யுத்த நீதிமன்றம், சர்வதேச நீதிபதிகளை கொண்டு வருதல் ஆகிய அனைத்து விடய ங்களும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முற்றுப்பெற்று விட்டதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் தி-கதி இந்த நாட்டு மக்கள் முன்வைத்த பிர ச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்து வரலாற்று முக்கியத்துவமிக்க மாற்றத்தை தற்போதைய அரசாங்கம் நாட்டில் ஏற்படுத்தி இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் சிவலிங்கம்



**மண்ணில்** 15.08.1955

**விண்ணில்** 03.08.2018

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வல்லிபுரம் சிவலிங்கம் அவர் கள் நேற்று (03.08.2018) வெள்ளிக்கிழமை அமரத் துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் உமாராணியின் பாசமிகு கணவரும் குருபரனின் அன்புத் தந்தையும் சைலாவின் அன்பு மாமனாரும் அபிராமியின் அன்புப் பேரனும் ஜெய ராணியின் மைத்துனரும் ஆனந்தகுமாரின் சகலனும் ஜீவிதா, ஜனார்த்தனன், ஜெனுத்தன், கமலகுமார், ஹரேராம் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2018) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
குருபரன் - 077 275 0819, 076 556 9098

(C-3435)

# இயற்கை சேதனப் பசளைகளைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு 18ஆயிரம் ரூபாய் மானியம்

## விவசாய அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இயற்கையான சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் விசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 18 ஆயிரம் ரூபாவை வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இயற்கை பசளையைப் பயன்படுத்தும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



இதற்கான ஆலோசனைகள் அமைச்சரினால் நேற்று முன்தினம் மாலை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு உர நிவாரணத்திற்கு பதிலாக இயற்கை உரத்தை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு இந்த பணம் வழங்கப்படவுள்ளது.

இயற்கை பசளையை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை விவசாயிகள் மத்தியில் விரிவுபடுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. சுமார் 5,000 விவசாயிகள் இயற்கை உரத்தை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு இயற்கை உரத்தை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை வழங்குவதற்காக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சமர்ப்பித்த ஆவணத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரசாங்கம் இந்த வருடத் தில் விவசாயிகளுக்கு உரமானியத்தை வழங்குவதற்காக 33 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற Reality Show வயதெல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வருகின்ற Youth With Talent Reality Show நிகழ்வில் பங்கு கொள்பவர்களின் வயதெல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்நிகழ்வில் 13-35 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கு பற்ற முடியும். மேலும் நிகழ்த்தப்படும் Reality show நிகழ்வானது 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் மேடையில் அரங்கேற்றக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயத்துடன் அல்லது 021-222-2526 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ஏ.தவேந்திரன் அறிவித்துள்ளார். (இ-9)

# புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் அத்தநாயக்க

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்து மீண்டும் அரசியலில் ஈடுபடவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடுவலையில் நேற்று முன்தினம்நடை பெற்ற சமய வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்கருத்து முரண்பாடுகள் காரணமாக கடந்த காலங்களில் பகிரங்க அரசியலிலிருந்து விலகி இருந்தேன். மீண்டும் செயற்பாட்டு ரீதியான அரசியலில் ஈடுபடுவதற்காக வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளேன்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்படும். அந்த அரசியல் கட்சி முன்னாள்ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும்முன்னாள் பிரதமர் டிஎஸ். சேனநாயக்கவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மேலும் இலங்கைக்குள்இருந்து பழைய அரசியல் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதுடன் புதிய அரசியல்கலாசாரத்தை உருவாக்க வேண்டும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (இ-7)

# அம்பாறையில் கடும் காற்று

## 76 வீடுகள் சேதம்





(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மற்றும் நவகம்புர பகுதிகளில் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக சுமார் 76 வீடுகள் சேதமடைந்துள்ளன.



நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் காற்று காரணமாக இந்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை வேளையில் மழையுடன் கடும் காற்று வீசியுள்ளதால் இந்த சேதங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் செல்லம்மா சுப்பிரமணியம்

யாழ்ப்பாண கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்
திரு. சு.சரவணபவன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்
அவர்கள் 02.08.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
(சி-3426)

# கண்ணீர் அஞ்சலி

எமது அமைச்சில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
செல்வி.ந.இராஜலக்ஷ்மி அவர்களுடைய பாசமிகு தாயார்

## அமரர். நவரத்தினம் சந்திரவதனி

அவர்கள் 03.08.2018 வெள்ளிக்கிழமையன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும் உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம், விவசாய அமைச்சு–வடமாகாணம்.
(5253)


# இராசி பலன்

04.08.2018
ஆடி 19, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சப்தமி முற்பகல் 8.09 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.56 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
வளவன்

கிரகநிலை: சூரி, புத, ராகு; செவ், கேது; சனி; குரு; சுக்
சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**மேடம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் கூடும்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், வேலைச் சுமை கூடும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, தடைகள் விலகும் நாள்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கடன் தொல்லைகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**துலாம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரிடையே கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தனவரவுகள் திருப்திகரமாக அமையும், எடுத்த காரியம் எளிதில் கைகூடும்.

**மீனம்:** முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 2018 ஆம் ஆண்டு சிறந்த முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான நல்லாசிரியர் விருது வழங்கும் நிகழ்வு பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகவும் அனுசரணையாளராகவும் வைத்திய கலாநிதி டாக்டர் வை.தியாகராஜா கலந்து கொண்டார். (படங்கள்: சக்தி)

## சாவகச்சேரி நகரசபையின் தனித்துவம் பேண அலங்கார வளைவு அமைக்கக் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் தனித்துவத்தினைப் பேணும் வகையிலும் ஏனைய பிரதேச மக்கள் இலகுவாக நகரசபை எல்லையை இனங்காணக் கூடிய வகையிலும் நகர சபை ஆரம்பம் மற்றும் முடிவுப் பகுதிகளில் அலங்கார வளைவு அமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த நகரசபையின் அமர்வின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

சாவகச்சேரி நகர சபையின் எல்லையாகவும் நுழைவாயிலாகவும் காணப்படுகின்ற கண்டி வீதியில் மீசாலை வடக்கு ஊரெல்லைத் தெருவிலும் மற்றைய வளைவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தினைத் தாண்டியும் அமைக்கப்பட வேண்டும்.

கொடிகாமம் கண்டி வீதி ஊடாக சாவகச்சேரி நகர சபை பகுதிக்குள் உள் நுழைகின்ற போதும், நகரசபையை விட்டு யாழ் நோக்கி செல்கின்ற போதும் எமது நகரத்தின் தனித்துவத்தினை ஏனைய பகுதி மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

அலங்கார வளைவு எமது நகரசபைக்கு இல்லாமை ஒரு குறைபாடாகக் காணப் படுகிறது.

இவ்வாறான ஒரு அலங்கார வளைவு நகர சபைக்கு இருப்பது அத்தியாவசியமான தேவைப்பாடாகக் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)




## பாலர் விளையாட்டுப் போட்டி

(சாவனச்சேரி)

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டியின் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி வினோஜிதா கணேசநாதன் கலந்துகொள்வார். (இ-89)

## யாழிலிருந்து மடுவுக்கு யாத்திரை



(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து மருத மடு அன்னையின் யாத்திரைத் தலத்துக்கு புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை சாள்ஸ் யஸ்ரின் ஆசியுடன் நேற்று வெள்ளிக் கிழமை காலை 7.30 மணியளவில் பக்தர்கள் யாத்திரை ஆரம்பித்தனர். (இ-106)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வண்வடமேற்குஆனைக் கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தான திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-7)

## தகவல் உரிமைச் சட்டம் குறித்து பிரதிபலித்தல் அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் இளைஞர் கழகம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஆகியன நடத்தும்நல்லிணக்க பொறிமுறையில் நிலைமாறுகால நீதி மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பான பிரதிபலித்தல் அமர்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

கைதடி சரஸ்வதி நிலையத்தின் வைரவிழா மண்டபத்தில் இளைஞர் கழகத் தலைவர் பா.சோபின் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய தலைமை நிகழ்ச்சித் திட்ட அலுவலர் திருமதி. க.இந்துமதி , கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், கைதடி மேற்கு கிராம அலுவலர் கி.சதீசன், கைதடி மேற்கு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி. சிவானந்தன் சுபாஜினி, தென்மராட்சி இளைஞர் சேவைகள் அலுவலர் இ.அனுரதன், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-30)

## நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபையால் பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவானது நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் நல்லைக் குமரன் என்னும் மலரினை வெளியிடுவதுடன் பாடசாலை மாணவர்களிடையே சைவசமய அறிவினை வளர்ப்பதற்காகப் போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

இவ்வருடம் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் உள்ள அனைத்து பாடசாலைக்கும் தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு சமய அறிவினையும் பேச்சுத்திறனையும் வளர்க்கும் முகமாக பேச்சுப் போட்டி நடத்துவதென தீர்மானித்து விண்ணப்பங்கள் கோரியிருந்தோம். சைவசமய ஆர்வமுள்ள பாடசாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தரம் 6-8 கீழ்ப் பிரிவு (5நிமிடங்கள்) எனவும் தரம் 9-11 மத்திய பிரிவு (7 நிமிடங்கள்) எனவும் தரம் 12-13 மேல் பிரிவு (10 நிமிடங்கள்) எனவும் பிரிக்கப்பட்டு கீழ்ப் பிரிவிற்குரிய தலைப்புக்கள் முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது. (கீழ் பிரிவு பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள் ஆலயம் தொழுவது சாலவும் நன்று, விரதங்களும் விரத அனுட்டானங்களும், ஆறுமுக நாவலரின் சைவப்பணிகள்). ஏனைய பிரிவுகளுக்குப்போட்டி நடைபெறும் நாளன்று தலைப்புக்கள் வழங்கப்பட்டு தயார்படுத்தலுக்கு நேரம் கொடுக்கப்படுவது என தீர்மானிக்கப் பட்டுள்ளது.

10.08.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணம் நாவலர் வீதியில் (TCT super market க்கு முன்னாக) அமைந்துள்ள நாவலர் கலாசார மணி மண்டபத்தில் காலை 8 மணிக்கு போட்டிகள் நடைபெறவுள்ளன என யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## மைதானப் புனரமைப்பு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு முள்ளியான் - கேவில் பிரதேச நிலாவெளி விளையாட்டுக் கழக மைதான புனரமைப்புப் பணிகள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் செபமாலை செபஸ்ரியனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கோவில் பகுதியில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த் பகுதி மக்கள் நிலாவெளி மைதான புனரமைப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டுதருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதன்பிரகாரம் நிலாவெளி விளையாட்டு கழகத்தினருக்கு நிதி வழங்கப் பட்டதை அடுத்து குறித்த மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)



செம்பியன்பற்று அ. த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை அதிபர் கே.கணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருதங்கேணி பிரதேச செயலாளர் கே. கனகேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், கலை நிகழ்வு நடைபெறுவதையும், பரிசில்களை விருந்தினராக கலந்து கொண்ட மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி கனகேஸ்வரன் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மகாலிங்கம்)

## பார்த்தீனிய ஒழிப்புக்கு ஒத்துழைக்காதோருக்கு எச்சரிக்கை

# ரூ.10 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை தண்டம்! ஒரு மாதம் முதல் 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை

## வடக்கு விவசாய அமைச்சு விசேட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தை ஆக்கிரமித்துவரும் பார்த்தீனிய செடிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் வெற்றியளிக்காத காரணத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இன்று முதல் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பார்த்தீனியச் செடி ஆக்கிரமிப்பை அழிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பார்த்தீனிய செடிப் பரம்பலை ஒழிப்பதற்கு கடந்த 1999 ஆம் ஆண்டில் இருந்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தும் அது முற்று முழுதாக் வெற்றியளிக்கவில்லை.

செயற்றிட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் அவற்றை உத்வேகத்துடன் செயற்படுத்துவதற்கு இவ்வாறான கலந்துரையாடல்கள் பலனளிக்கின்றன. இக் கலந்துரையாடலில் பார்த்தீனிய ஒழிப்பு வேலைத்திட்டங்களை மிக சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகளை ஆராய்ந்துள்ளோம்.

இது பொதுப்பிரச்சினையாகவுள்ளது. இதனை சமூக அக்கறையுடன் செயற்படுத்த வேண்டும். ஆனால் சமூக நலன் சார்ந்த விடயத்தில் அனைவரும் குறைந்த அக்கறை காட்டுவதால், சட்ட ரீதியாக அணுகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதை உடனடியாக மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம், என அவர் மேலும் தெரிவித்தார்.



இந்த விடயம் தொடர்பாக மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் கருத்து தெரிவிக்கையில்,

பார்த்தீனியம் மிகவும் ஆபத்தான ஒரு களை ஆகும். இது ஆக்கிரமிப்பு களை என்பதால் இதன் பரவல் வீதம் அதிகமாகவுள்ளது.

இது விவசாய நிலம், பொது நிலம், வீதிகள் வடிகால்களில் பரந்து காணப்படுகிறது. தற்போது பாடசாலை திணைக்களங்களிலும் இது பரவலாகக் காணப்படுகிறது. இவற்றை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். தனித் தனியாகப் பார்க்காது ஒருங்கிணைந்து கட்டுப்படுத்தல் அவசியம்.

இவற்றை அழிக்கும் போது இவற்றின் விதைகள் தோன்ற முன்னர் அழிக்க வேண்டும். இது 2 தொடக்கம் 20 ஆண்டு நிலைத்து நின்று வளர்கிறது. எனவே அழிப்பது மிகவும் கடினம்,

விவசாய திணைக்களத்தின் ஊடாக பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம். அதாவது விழிப்புணர்வு நடவடிக்கைகள், சிரமதானம், இரசாயன மருந்துகள் தூவுதல், செடிகளை வெட்டி எரிக்கும் திட்டத்தையும் அமுலாக்கியுள்ளோம். ஆனால் பலருடைய ஒத்துழைப்பின்மையால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய விவசாய பணிப்பாளர் நாயகம் பொறுப்பாக உள்ளார். தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமைவாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு 144 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் நேரடியாக அப்பகுதிகளுக்குச் சென்று சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள். குறித்த செடி பரவியுள்ள பகுதிகளின் உரிமையாளர்கள், வாடகைக்கு குடியிருப்பவர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முதன்முறையாக மஞ்சள் நிற அறிவித்தல் வழங்கப்படும். அந்த அறிவித்தலில் கொடுக்கப்பட்ட காலத்துக்குள் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் இறுதியாக சிவப்பு நிறத்தில் அறிவித்தல் வழங்கப்படும். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழங்கு தொடரப்படும். குறைந்தது 10 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் ரூபாய் வரை தண்டப்பணம் அறவிடப்படுவதுடன், ஒரு மாதம் தொடக்கம் 6 மாதங்கள் உட்பட்ட சிறைத்தண்டனை வழங்க வாய்ப்புள்ளது என தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.தெய்வேந்திரம் கருத்துத் தெரிவிக்கையில்,

பார்த்தீனியம் பொதுவாக அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு விடயம், குறிப்பாக விவாசாயத்துறைக்கு சவாலாக உள்ளது. அதை அழிப்பதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் ஒரு விதமான நிர்வாக ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். அந்த வகையில் மாவட்ட, பிரதேச விவசாய குழுக்கூட்டம் நடத்தி அதில் உப குழுக்கள் அமைத்து இந்த விடயம் தொடர்பாக அரச உத்தியோகத்தர்கள் ஆராய்ந்து பொதுக்கூட்டங்களில் பிரச்சினைகளை தெரியப்படுத்துவதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடியும்.

அந்த வகையில் இன்றைய (நேற்று) கூட்டத்தில் 14 தீர்மானங்களை எடுத்துள்ளோம். விரைவில் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பார்த்தீனியத்தை ஒழிக்க முடியும்.

தனியாக விவசாய அமைச்சு மட்டும் நடவடிக்கை எடுக்க முடியாது. அரச, அரச சார்பற்ற திணைக்களம், பொது மக்கள், சமூக மட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம்.

இந்தச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு நிதிவசதிகள் போதாது. ஆனால் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அனைவரும் பொது நலன் சார்ந்து செயற்பட வேண்டும்.

மேலும் பொது இடங்களில் பார்த்தீனிய செடிகள் இருப்பது அறியப்பட்டால் அல்லது பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பார்த்தீனிய செடிகள் படர்ந்திருக்கும் பகுதிகள் தொடர்பாக விவசாய திணைக்களத்துக்கு தெரிவிக்க முடியும்.

021 221 7306 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு விபரங்களை அறியத்தர முடியும். அதன் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார். (இ-9)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் சூரியசக்தி வீதி விளக்குகள் கொள்வனவு செய்தலுக்கான விலை மனுக்கோரல்

கேள்வி இல: NP/14/41(4)/2/4/PSDG/18/06

1. தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பிரதேசத்தினுள் சூரியசக்தி வீதி விளக்குகளைப் பொருத்தித் தருவதற்கான விலை மனுக்கள் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.
2. கேள்வி தொடர்பான விபரங்களை காங்கேசன்துறை வீதி,வல்வெட்டித்துறை எனும் முகவரியிலுள்ள வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் 03.08.2018 இலிருந்து 17.08.2018 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை பார்வையிட முடிவதுடன் ரூபா 1000.00 பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை கொள்வனவு செய்ய முடியும்.
3. விலைமனுக்கள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை எனும் முகவரிக்கு 2018.08.17ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சூரியசக்தி வீதி விளக்குகள் பொருத்தித் தருவதற்கான விலை மனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். பிந்திய விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் யாவும் கேள்வி நேரம் முடிவடைந்தவுடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனுக்களை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையையே இரத்துச் செய்வதற்கும் பெறுகை தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கும் பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

| தொ. இல. | விபரம் | தேவையான எண்ணிக்கை | கேள்வி பிணை (பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்) |
|---|---|---|---|
| 01 | சூரியசக்தி வீதி விளக்குகள் பொருத்தித்தரல் (Supply and fixing of Solar street lights) | 07 | ரூபா. 10,000.00 |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்.



## வேலை வாய்ப்பு

இயந்திரம் மூலம் கல் அரியும் நிறுவனத்துக்கு வேலை ஆட்கள் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். (5254)

தொடர்புகளுக்கு:077 650 8376, 077 220 9583



### பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## விண்ணப்பம் கோரல்

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணியில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 16.08.2018 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், வாடியடி பூநகரி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி-1 சாரதி**
**பதவிச் சம்பளம் குறியீட்டு இலக்கம். 13/2015இன்படி.**
**சம்பள அளவுத் திட்டம்.**
**13,515-110X10-120X10-15,815.00**

கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இதரப்படிகளும் வழங்கப்படும்.

**வெற்றிடம்-1**
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்,**

8ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் கார் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**நிபந்தனைகள்**

- வயதெல்லை 18-45க்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றுவோர் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் கோரப்படும் பிணைப்பணம் வழங்க வேண்டும்.
- சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

தலைவர், பூ.கா.வ.கூ.சங்கம், வாடியடி, பூநகரி

# தேனீ வளர்ப்புத்திட்டத்தை ஊக்குவிப்பதற்கு ஒலுமடு, மாங்குளத்தில் 20 பயனாளிகள் தெரிவு

## முல்லை.மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முலலைத்தீவு மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒலுமடு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேனீ வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், இவ்வாண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 0.2 மில்லியன் ரூபா செலவில் இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஒலுமடு, மாங்குளம் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து 20 பயனாளிகள் தெரவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மேற் கொள்ளப்பட்டு மேற்படி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒட்டுசுட்டான், முள்ளியவளை, ஒலுமடு ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் 0.2 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் அழகுத் தாவர உற்பத்திகளுக்கு உதவும் வகையில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான செய ற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# சின்னப்பல்லவராயன்கட்டு குளத்தை ஆழமாக்கி புனரமையுங்கள்

## விவசாயிகள், கமக்கார அமைப்பினர் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி சின்னப் பல்லவராயன் கட்டுக்குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்படவேண்டும் என கரியாலை நாகபடுவான் கமக்கார அமைப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேசத்தில் காணப்படும் சின்னப்பல்லவராயன்கட்டு குளத்தை ஆழமாக்கி புனரமைத்துத் தருமாறு பிரதேச விவசாயிகள், கமக்கார அமைப்பினர் ஆகியோரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த குளத்தின் குறிப்பிட்ட சில அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், குளத்தில் அதிக நீரைத்தேக்கி வைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அதாவது, குளத்தின் உட்பகுதியை ஆழமாக்கி புனரமைக்க வேண்டும் என்றும் அவ்வாறு புனரமைப்பதன் மூலம் அதிக நீரைத்தேக்கி இதற்குட்பட்ட விவசாய நிலங்களில் நிறைவான பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கையானது இறுதியாக நடைபெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கிளிநொச்சியில் 23 மில். ரூபாவில் 88 விவசாயக் கிணறுகள் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதியுதவியுடன் 88 விவசாயக்கிணறுகள் 23.10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய செய்கைகளை மேம்படுத்தும் வகையிலும் விவசாயக்குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையிலும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினூடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இவ்வாண்டு 23.10 மில்லியன் ரூபா செலவில் 88 விவசாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரி, விக்கப்பட்டுள்ளது.

அதாவது கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாயவனூர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 19 பயனாளிகளுக்கு 19 கிணறுகள் 7.24 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புன்னைநீராவி கிராமத்தில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 25 கிணறுகள் 7.86 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின் றன.

பூநகரிப் பிரதேசத்தில் பல்லவராயன்கட்டு பகுதியில் 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 0.42 மில்லியன் ரூபா செலவில் திருத்த வேலைகளும் பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இயக்கச்சி கோயில் வயல் ஆகிய பகுதிகளில் 19 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 19 கிணறுகள் 3.68 மில்லியன் ரூபா செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன என விவசாயத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டில் இதே திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 175 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான புதிய கிணறுகள் அமைத்தல், கிணறுகளை திருத்துதல் போன்ற வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# ஆங்கில பேச்சுப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனை ஆங்கில அலகு காவேரி கலாமன்ற அனுசரணையுடன் நடத்தும் தயார் செய்யப்பட்ட ஆங்கில பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு நாளை மறுதினம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி டிப்போசந்தியிலுள்ள மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) பி.என்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (2)

# விவசாயிகளுக்கான பொதுக்கூட்டம், நிர்வாகத் தெரிவுக்கான கால அட்டவணை

## ஒலுமடு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கும் மற்றும் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்குமான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவுகளும் நடைபெறவுள்ளது. இதற்கான கால நேர அட்டவணையை ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தச்சடம்பன் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் மற்றும் தச்சடம்பன் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு முற்பகல் 11 மணிக்கும் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மணவாளன் பட்ட முறிப்புக் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் பிற்பகல் 2.30 மணிக்கு மற்றும் மணவாளன் பட்ட முறிப்பு "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஒலுமடு கமநல சேவை நிலை யத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பனிக்கன்குளம் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு பனிக்கன்குளம் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் பனிக்கன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் அன்றைய தினம் மாங்குளம் வடக்கு "சிதமு" மகளிர் விவசாயிகளுக்கு முற்பகல் 11 மணிக்கு பழைய கொலனி பொது நோக்கு மண்டபத்திலும் அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு மாங்குளம் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு மாங்குளம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

திருமுறிகண்டி கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் மற்றும் திருமுறிகண்டி "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு முற்பகல் 11 மணிக்கும் திருமுறிகண்டி கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பகாமம் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு காலை 9 மணிக்கும் அம்பகாமம் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு முற்பகல் 11 மணிக்கும் அம்பகாமம் கிராம பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புலுமச்சி நாதகுளம் "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு புலுமச்சி நாதகுளம் பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இறுதியாக இந்துபுரம் கிராம கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் மற்றும் இந்துபுரம் கிராம "சிதமு" மகளிர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இந்துபுரம் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பொதுக்கூட்டத்திலும் நிர்வாகத் தெரிவுகளிலும் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (2-15)




மன்னார் உயிலங்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் போது வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசனுடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.ஏ.மோகன்ராஸ், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் ஆகியோர் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

# மின் துண்டிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் நேற்று மாபெரும் கவனயீர்ப்பு

## மகஜர்கள் கையளிப்பு







(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் மின் துண்டிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் குறித்த பேரணி நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக சீராக மின்சாரம் வழங்கப்படாத நிலையில் அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்பட்டு வருகின்றது.

குறிப்பாக தினமும் சில மணி நேரம் அல்லது நாள் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்படுவது வழமையாகிய நிலையில் காணப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனால் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

குறிப்பாக தற்போது உயர்தர பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் பாதிப்படைவதோடு, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும் வர்த்தகர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பாதிப்படைந்து வரும் நிலையில் உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் குறித்த கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன் ஆரம்பமான குறித்த பேரணி பிரதான வீதியூடாக நகர்ந்து மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

குறித்த பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை தம்முடன் ஏந்தியவாறு கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த பேரணியில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர்அருட்தந்தைஎஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், சர்வ மத தலைவர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மல நாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, சட்டத்தரணி பா.டெனீஸ்வரன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மன் ரெட்ணசிங்கம் குமரேஷ், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

குறித்த பேரணியின் இறுதியில் கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் பிரஜைகள் குழுவினரினால் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் மின் பொறியியலாளர் ஆகியோருக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)



# அபிவிருத்தி, நல்லிணக்க வேலைத்திட்டங்கள் தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பங்கேற்பு

(குருமன்காடு)

வவுனியாவில் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க பங்கேற்றிருந்தார்.



வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஹனிபா தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்ட சந்திரிகா குமாரதுங்கவினால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்தும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளநல சமூக ஒருமைப்பாடு ஆகியவற்றினை மேம்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கிராமங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பெண் தலைமைத்துவ குடும்பங்களிடம் தனியார் நிறுவனங்கள் கடன் திட்டங்களை வழங்கி அங்கு பேசப்படும் பேரங்கள் மற்றும் மத்திய வங்கியின் கீழ் வரும் நிறுவனங்களை அவ்வாறான செயற்பாடுகளை கவனிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதுடன், அவற்றைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளையும் முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

மேலும் வவுனியா, மன்னார் மாவட்டங்களின் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள், பட்டதாரிகளுக்கான கடன் திட்டங்கள், ஊடகவியலாளருக்கான கடன் திட்டங்கள் மற்றும் புதிதாக செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் விபரங்களையும் மாவட்ட அதிகாரிகள் கேட்டு அறிந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், வடமாகாண பிரதி அபிவிருத்தி அமைச்சர் கே.கே. மஸ்தான், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா மற்றும் பிரதேச செயலாளர்கள், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## மனித உரிமை ஆணைக்குழுவின் பெயரை பயன்படுத்தி பணம் வசூலித்தவர் கைது!

(குருமன்காடு) .

வவுனியாவில் மனித உரிமை ஆணைக்குழுவின் பெயரை பயன்படுத்தி பணம் வசூலித்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் மனித உரிமைகள் தொடர்பாக திரிய பவுண்டேசன் என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதற்கு விண்ணப்பப்படிவம் தயாரித்து மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பெயரைப் பயன்படுத்தி பொதுமக்களிடம் அங்கத்துவப்பணம் பெற்று வந்த உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த அந் நிறுவனத்தின் வடபிராந்திய இணைப்பாளராக பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

மனிதவுரிமைகள்ஆணைக் குழு எனக் கூறி பொதுமக்களிடம் அங்கத்துவம், தமது நிறுவனத்தின் அடையாள அட்டை மற்றும் சீருடை என்பவற்றுக்கு ஒருவர் பணம் பெற்று வந்துள்ளார். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வன்னிப்பிராந்திய இணைப்பாளர் திரிய பவுண்டேசனுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கும் தொடர்பு இல்லை. இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பொறுப்பேற்காது என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து வவுனியாவில் செயற்பட்டு வரும் தொண்டு நிறுவனம் ஒன்று குறித்த மனித உரிமைகள் பவுண்டேசனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டிருந்தது. இதையடுத்து குறித்த பவுண்டேசனின் வடபிராந்திய பணிப்பாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250-281)

## அலரி விதை உட்கொண்ட நிலையில் சிறுமிகள் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடத்தப்பட்ட இரண்டு பாடசாலை சிறுமிகள் அலரி விதை உட்கொண்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில்கல்வி கற்கும் 15, 16 வயது சிறுமிகள் இருவர் நேற்று முன்தினம் பாடசாலை விட்டு வீடு திரும்பிய போதுகாணாமல்போயிருந்தனர்.

காணாமல் போன சிறுமிகள் இருவரும் வவுனியா, சாந்தசோலை வீதியிலுள்ள கைவிடப்பட்ட வீடு ஒன்றில் கொண்டு சென்று வைத்திருந்த நிலையில் அவர்கள் அங்கிருந்து வெளியேறி அயலவர்களின் உதவியுடன் தப்பித்துள்ளனர். அலரி விதை உட்கொண்ட நிலையில் காணப்பட்ட இரு சிறுமிகளும் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து வீட்டை இரவு பூந்தோட்டம் இளைஞர்கள் முற்றுகையிட்டதுடன், பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இரு சிறுமிகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் கைவிடப்பட்ட வீட்டில் இருந்து சாப்பாட்டு பார்சல், தண்ணீர்ப்போத்தல், ஆண் ஒருவரின் பாதணி என்பனவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர் ஒருவர்கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை முடிந்து வீடு திரும்பிய பின்னர், பாடப் புத்தகம் வாங்குவதற்காக சைக்கிளில் சென்றனர். அப்பொழுது ஆட்டோவில் வந்தவர்கள் அவர்களை கட்டாயப்படுத்தி சாந்தபுரம் பகுதிக்கு அழைத்துச் சென்று கத்தி முனையில் துன்புறுத்தியதுடன், பலவந்தமாக அலரி விதை உட்கொள்ள வைக்கப்பட்டுள்ளது. சிறுமிகளை காணவில்லையென உறவினர்கள் தேடிய நிலையில், சம்பவ இடத்திலிருந்து தப்பி வந்த சிறுமிகள் நடந்தவற்றை கூறியுள்ளனர். இதையடுத்து இரவு [9] மணியளவில் வவுனியா [வைத்தியசாலை]யில் அவர்க[ள் அ]னுமதிக்கப்பட்டனர் எனத்தெரிவித்தனர். (2-28)

## கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை திறந்து வைப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 1992 ஆம் ஆண்டு பழைய மாணவர்களினால் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை அக் காலப்பகுதியில் கல்வி கற்பித்தல் ஆசிரியர்களினால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு கற்பித்த ஆசிரியரகள் பாடசாலையின் முகப்பு வீதியில் இருந்து மாலை அணிவித்து அழைத்துவரப்பட்டு பின்னா் அவர்களினால் கல்வி தாய் சரஸ்வதி சிலை திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து சிற்பக் கலைஞர்கள் அழைத்து வரப்பட்டு வடிவமைக்கப்பட்ட சரஸ்வதியின் சிலையே திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-312-84)

### பந்துலவின் தலையில் அடிபட்டுவிட்டதோ தெரியாது

# சிங்கப்பூருடனான உடன்படிக்கையால் இலங்கைக்குப் பாதிப்பில்லை -ஹர்ச

(கொழும்பு)

சிங்கப்பூர் - இலங்கை இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் நாட்டின் அபிவிருத்திக்கான நேரடி முதலீடுகளை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இந்த உடன்படிக்கை குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

சிங்கப்பூர் - இலங்கை இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நாட்டுக்கு பாதிப்பானது என சில தொழில் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதில் கையெழுத்திடுவதன் மூலம் நாடு அழிவை நோக்கிப் பயணிக்கும் எனவும் இதனால், இதனை எதிர்த்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு கோரியுள்ளனர்.

பிரித்தானியாவுடன் 1815 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை விட சிங்கப்பூருடனான உடன்படிக்கை பயங்கரமானது என எனது நண்பர் கலாநிதி பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

அப்படிஒப்பிட்டால் 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கை தரம் தாழ்ந்து விடும் எனவும் 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் இலங்கையின் உரிமைகள் பிரித்தானியாவுக்கு வழங்கப்பட்டது.

சிங்கப்பூருடனான உடன்படிக்கையில் அப்படி எதுவும் நடக்காது. பந்துல குணவர்த்தனவுக்கு தலையில் அடி ஏதும் பட்டுவிட்டதோ தெரியாது. சாதாரணமாக பந்துல இப்படியான கதைகளை கூற மாட்டார்.

சிங்கப்பூருடனான உடன்படிக்கையின் ஊடாக இலங்கையின் அபிவிருத்திக்கான நேரடி முதலீடுகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இந்த வர்த்தக உடன்படிக்கை எமக்கு ஒவ்வாது என எந்தச்சந்தர்ப்பத்திலாவது எவராவது கருதினால், அதற்கான தீர்வும் உடன்படிக்கைக்குள் இருக்கின்றது.

மேலும் ஒருவருட கால அவகாசத்தை வழங்கி, தேவையானால், இலங்கை உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொள்ளலாம். பந்துல குணவர்த்தன தரப்பினர் ஆட்சிக்கு வந்து, இந்த உடன்படிக்கையில் இருந்து விலக நினைத்தால், ஒரு வருட காலஅவகாசத்தை வழங்கி விலகிக்கொள்ளலாம்.

இது 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கை போன்ற உடன்படிக்கையல்ல. இப்படியான உடன்படிக்கைகளை கடந்த அரசாங்கம் கையெழுத்திட்டது என்பதை நாம் அறிவோம்.

என்றுமே விலகிச் செல்ல முடியாத உடன்படிக்கைகளில் கடந்த அரசாங்கம் கையெழுத்திட்டது.

உதாரணமாக கொழும்பில் இருந்த இரா்ணுவ தலைமையகம் விற்பனை செய்யப்பட்டமையானது அப்படியான உடன்படிக்கை. காரணம் அந்த உடன்படிக்கையில் இருந்து வெளியேற முடியாது எனவும் அதிர்ஷ்டவசமாக கொழும்பு துறைமுக நகர உடன்படிக்கையை எம்மால் மாற்றியமைக்க முடிந்தது. கொழும்பு துறைமுக நகரில் 50 ஏக்கர் நிலம், சீனாவுக்கு சொந்தமாக விற்பனை செய்ய உடன்படிக்கை தயார் செய்யப்பட்டிருந்தது.

எனினும் சிங்கப்பூர் உடன்படிக்கை மூலம் இவ்வாறான எதுவும் நடக்காது எனவும் இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களுக்கு சேவையாற்றாத சகல அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் உரிய நடவடிக்கை

(கொழும்பு)

மக்களுக்கு சேவையாற்றாத சகல அரச அதிகாரிகளுக்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.முக்கியமாக பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளடங்குவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தில் உள்ள சில அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் தமக்கு கிடைத்த வண்ணமுள்ளன.

இத்தகைய அரச அலுவலர்கள்,அதிகாரிகள் பொது மக்களுக்கு சேவையாற்றாமல் ஒப்பந்தகார்களுடன் இணைந்து செயற்படுவதனால் நிதிகள் முறையாக பொதுமக்களை சென்றடைவதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் திருகோணமலை மாவட்டத்தின் வளங்கள் எமது மக்களின் நலன்களுக்கு மாறாக குறிப்பிட்ட சிலரால் வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

அரச அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக உரிய அமைச்சர்களுடன் கலந்துரையாடியுள்ளேன்.

எனவே விரைவில் இவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சிறிய ரக கார்களுக்கான வரி எப்போது நீக்கப்படும்?

## மங்களவிடம் ரணில் கேள்வி

(கொழும்பு)

சிறிய ரக கார்களுக்கான வரி எப்போது நீக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வினவியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயிரம் சீசீ வலு இயந்திரக் கொள்ளவுக்கும் குறைவான இயந்திரங்களை கொண்ட வாகனங்களுக்கு அண்மையில் புதிதாக வரி விதிக்கப்பட்டிருந்தது.

அதிகளவான சிறிய ரக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதாக தெரிவித்தே இந்த ரக வாகனங்களுக்கான வரியை நிதி அமைச்சு அதிகரித்திருந்தது.

அதிகளவு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் கொழும்பு உள்ளிட்ட சனநெரிசல் மிக்க நகரங்களில் அதிகளவு போக்குவரத்து நெரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் இலகு ரயில் சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், இவ்வாறு ஆரம்பித்தால் மோட்டார் வாகன போக்குவரத்து நெரிசலை தவிர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்திலேயே சிறிய ரக வாகனங்களுக்கு அண்மையில் விதிக்கப்பட்ட வரியை எப்போது நீக்க முடியும் என்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர், நிதி அமைச்சரிடம் வினவியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# படையினர் மூலமாக வருமானம் ஈட்டித்தரும் பளிங்குக் கடற்கரை




(திருமலை)

திருகோணமலை மாவட்டம் சீனக்குடா பகுதியில் காணப்படும் பளிங்குக் கடற்கரை ஒரு சுற்றுலாப் பிரதேசமாகவும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகைதரும் ஒரு இடமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சீனக்குடா விமான நிலையத்தின் பராமரிப்பின் கீழ் பளிங்குக் கடற்கரை பராமரிக்கப்படுவதோடு, நாளாந்தம் நூற்றுக்கணக்கான உள்நாட்டு,வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது.

தொடர்ந்தும் இதனூடாக விமானப் படை அதிகளவான இலாபங்களை பெற்றுக்கொள்வதோடு, நுழைவுக் கட்டணமாக ஒருவருக்கு இருபது ரூபாவும், வாகன தரிப்பிடத்திற்கான கட்டணமும் அறவிடப்படுகிறது.

இப் பளிங்குக் கடற்கரையை இயற்கையுடன் ரசிக்க சுற்றுலாப் பயணிகள் நாடெங்கிலும் இருந்து வருகை தருகின்ற அதேவேளை வெளிநாட்டவர்கள் உட்பட உல்லாசப் பயணிகளும் இங்கு வருகை தருகின்றனர்.

மேலும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குவதற்கான சொகுசான அறைகள் உட்பட பல வசதிகளும் இங்கு காணப்படுவது வெளிநாட்டு,உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஒருசோடி தோடு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சைப் பிரிவில் ஒரு சோடி பொன்னிறமுடையதோடு 26.07.2018 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# நினைவுப்பேருரை

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் வே.பாலசுப்பிரமணியத்தின் 27ஆவது வருட நிஸ்னவு நாளை முன்னிட்டு நடத்தப்படும் நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்து மாமன்றத் தலைவர் மாணிக்கம் தவயோகராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வதோடு 'இலங்கையில் இந்துக்கள் குடித்தொகை ஆய்வு' ஏனும் தொனிப் பொருளில் நினைவுப் பேருரையினை ஆற்றவுள்ளார்.(இ

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசிய வைகோ

## தேசத்துரோக வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டமைக்காக, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோவுக்கு எதிரான தேசத்துரோக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் செப்டெம்பர் 18ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ மீது தேசத் துரோகப் பிரிவில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2009ஆம்ஆண்டுஜுலை 15ஆம் திகதி சென்னை ஆயிரம் விளக்கு ராணி சீதை மன்றத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் வைகோ பேசினார்.

இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் மத்திய அரசுக்கு எதிராகவும் ,மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் பேசியதாக வைகோ மீது ஆயிரம் விளக்கு பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இது குறித்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஐந்தாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி ஈஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்றது. இதன்போது வைகோ நீதிமன்றில் முன்னிலையானார்.

அப்போது இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக வைகோ மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து வைகோவின் கருத்தை நீதிபதி கேட்டார்.

அதற்கு மத்திய அரசுக்கு எதிராகத் தான் பேசியதாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசவில்லை என்றும், தான் குற்றமற்றவன் என்றும் வைகோ தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகள் எதிர்வரும் செப்டெம்பர் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7)


# அரசியலில் நல்ல சகுனம் ஆரம்பித்துவிட்டது

# ஆட்சியைக் கைப்பற்றும் வரை நாம் ஓயப்போவதில்லை!

## ‘ஜனபலசேனா’ எழுச்சிப் பேரணியில் மகிந்த சூளுரை

(கொழும்பு)

நான் இந்த அரங்கை அடையும்போது பூ மரத்திலிருந்து பூக்கள் விழுவதை அவதானித்தேன். எனவே, அது நல்ல சகுனத்தின் அடையாளமாகும். ஆகவே, எமக்கு தற்போது அரசியலில் நல்ல சகுனம் ஆரம்பித்துவிட்டதாகவே நான் கருதுகிறேன். எனவே ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் நாம் ஓயப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.



கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த "ஜனபலசேனா" மக்கள் எழுச்சிப் பேரணி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றதுடன் பேரணியைத் தொடர்ந்து விகார மகாதேவி பூங்காவிலுள்ள உள்ளக அரங்கில் கூட்டமும் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது மிகவும் பயங்கர நிலையை அடைந்து வருகிறது. மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது திணறுகின்றனர். பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. மூன்று நேரம் உணவு உண்டு வாழ்ந்த சமூகம் தற்போது ஒரு வேளை உணவுடன் கட்டுப்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்நிலைக்கு தாய்மார்களும் பழக்கப்பட்டு விட்டனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இந்த நிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே ஏற்படுத்தியுள்ளனர். என்றுமில்லாதவாறு வரிகளை அதிகரிக்கின்றனர். தேர்தல் காலத்தில் இளம் சமூகத்தினர் மழைக்கு நனையாது மோட்டார் கார்களில் பயணிக்கும் கனவை அரசாங்கம் ஏற்படுத்தியது. ஆனால் தற்போது என்ன நடைபெற்றுள்ளது மோட்டார் காருக்கு வரி அதிகரித்தமை குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் உண்டியலுக்கு வரி அறவிடும் அரசாங்கம் மோட்டார் காருக்கு வரி அறவிடுவதில் ஆச்சரியம் இல்லை.

நல்லாட்சி அரசிலுள்ளவர்கள் மக்கள் பற்றி கவனம் செலுத்தாது தம்மை பற்றி மாத்திரம் அக்கறை கொண்டுள்ளனர். ஆட்சியாளர்கள் தமக்கு ஏற்றவகையில் அரசியலமைப்பைப் பயன்படுத்துவதற்கு எத்தனிக்கின்றனர். மேலும் கடந்த காலங்களில் எம்மை திருடர்கள் எனக் குறிப்பிட்டு வந்தனர். ஆனால்தற்போது யார் திருடர்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

அரசாங்கம் எவ்விதமான அபிவிருத்திகளையும் மேற்கொள்வதாக இல்லை. மாறாக தேசிய வளங்களை விற்பனை செய்து வருகிறது. நாட்டிலுள்ள பெருமளவு காணியையும் விற்பனை செய்து விட்டது. ஆகவே எதிர்கால எமது சந்ததியினருக்கு நாட்டில் எதுவும் இல்லாது போய் விடும் அபாயம் உள்ளது. அரசாங்கம் விற்பனை செய்யும் வளங்களை கொள்வனவு செய்வதற்கு ஒரு தரப்பினர் உள்ளனர்.

எனவே அந்த சர்வதேச தரப்பினருக்கு நாம் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அதனைப் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது நல்லாட்சி அரசாங்கம் விற்பனை செய்யும் வளங்களை கொள்வனவு செய்ய வேண்டாம். ஏனெனில் நாம் ஆட்சிக்கு வந்ததுடன் அது தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துவோம். அதனை எந்தவொரு நாடும் மறந்துவிட வேண்டாம்.

நாட்டிலுள்ள சகல வர்க்கத்திற்குச் சொந்தமான குறித்த வளங்களை விற்பனை செய்யும் எந்தவொரு அதிகாரமும் அரசாங்கத்திற்கு இல்லை. அதற்கான ஆணையை மக்கள் வழங்கவுமில்லை. அவ்வாறு விற்பனை மூலம் அரசாங்கத்திலுள்ளவர்கள் தரகுப் பணம் பெறுகின்றனர். அதனால் அரசாங்கத்திற்குள்ளேயே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் விரல் நீட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை திருடர் என முதலில் குறிப்பிட்டவர்கள் நாம் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முதலில் பிரதமரை திருடர் எனக் குறிப்பிட்டார். நாட்டில் நிர்வாகம் இல்லை. அராஜக ஆட்சியே முன்னெடுக்கப்படுகிறது. மத்திய வங்கி மோசடியுடன் தொடர்புபட்ட அர்ஜூன மகேந்திரன் வெளிநாட்டிலுள்ளார். அவரைக் கொண்டு வரமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. எனினும் ‘அவரின் பிள்ளைகளின் திருமணத்தில் நாட்டுத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

மோசடிகளை அத்தரப்பினர் மறந்துள்ளதுடன் எம்மையும் மறக்கச் சொல்கின்றனர். அது மாத்திரமன்றி எனது பெயருக்கு அரசாங்கத்திலுள்ளவர்களுக்கு பெரும் அச்சம் உள்ளது. காலி மைதானத்தில் கட்டடம் ஒன்றிற்கு எனது பெயர் சூட்டப்பட்டுள்ளதனால் அம்மைதானத்தை அகற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றனர். நீதிமன்றத்தைப் பயன்படுத்தி எம்மை அடக்குவதற்கு எதிர்பார்க்கின்றனர். அதற்காகவே விசேட நீதிமன்றை அமைத்துள்ளனர். அதன் மூலம் வழக்குகள் அமைச்சர்களின் காரியாலயங்களில் தீர்மானிக்கப்படுகிறது. அங்கு சட்டமா அதிபரை அழைத்தும் தீர்மானிக்கின்றனர். சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கின்றனர். எனவே நீதிமன்றங்களை நிர்வகிக்கும் ஏகாதிபத்திய நிலைக்கு அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. இதுதானா நீதிமன்ற சுயாதீனம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

மக்கள்விடுதலை முன்னணி உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் இது குறித்து தற்போது பேசுவதில்லை. இன்னும் நாம்தான் ஆட்சி நடத்துவதாக மக்கள் விடுதலை முன்னணி நினைத்துக் கொண்டிருக்கிறது. அத்தரப்பு அரசாங்கத்தை விமர்சிக்காது எம்மையே விமர்சிக்கின்றது.

எனினும் தொடர்ந்து மக்களை ஏமாற்ற முடியாது. ஆகவே அரசாங்கம் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களினால் நாட்டையும் மக்களையும் சீரழிக்கின்றது.

கடந்த காலங்களில் மக்களின் கைகளில் பணம் இருந்தது. ஆனால் தற்போது மக்களின் கைகளில் பணம் இல்லை. போதைப்பொருள் வர்த்தகர்களின் கைகளிலேயே பணம் புழங்குகிறது. போதைப்பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் அரசியல் வாதிகள் உள்ளனர். பாடசாலைகளுக்குள்ளும்போதைப் பொருள் சென்றுள்ளது.

நாட்டில் குற்றச்செயல் அதிகரித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகிறார். எனினும் நாட்டில் குற்றச் செயல் குறைவடைந்துள்ளதாக பிரதமர் குறிப்பிடுகிறார். இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இது மிகவும் பயங்கரமானதாகும். போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரம் இராணுவத்திற்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றனர்.

எனவே அதன் பின்னர் நாட்டில் கொலைச் சம்பவம் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டு அது குறித்தும் இராணுவத்திடம் பொறுப்புக் கொடுப்பர். பின்னர் குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டு அதனை விசாரணை செய்வதற்கும் இராணுவத்திடம் வழங்குவர். இதுதான் இராணுவமயமாக்கலின் முதல் கட்ட நடவடிக்கைகளாகும். இச்செயற்பாட்டுக்கு பாராளுமன்றத்திலும் அனுமதி பெற்று சட்டமாக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றனர். எனவே இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பின் வரிசை உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆகையினால்தான் நாம் இன்று இந்த பேரணியை ஆரம்பித்துள்ளோம். இப்பேரணி இத்துடன் நிறைவடையப் போவதில்லை. நல்லாட்சி அரசாங்கத்தை துரத்தும் வரையில், அரசாங்கம் பதவி விலகும் வரையில் இப்போராட்டத்தைத் கைவிடப் போவதில்லை. அரசாங்கம் பதவி விலகுவதற்கான காலம் தற்போது வந்துள்ளது. ஆகவே பதவி விலக வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான வலம்புரிச் சங்குடன் நால்வர் கைது

(கொழும்பு)

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய வலம்புரிச் சங்குடன் பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை தலைமலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உவர்மலை மட்டிககளி பிரதேசத்தில் வியாபார நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட வலம்புரி சங்குடன் நால்வரை சந்தேகத்தின் அடிப்படையில் தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.





அவர்களிடமிருந்து ஒரு கோடிக்கும் அதிகமான பெறுமதியுடைய வலம்புரி சங்கை தாம் கைப்பற்றியதாக அவர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிண்ணியா, மூதூர் மற்றும் திருகோணமலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பயணம் செய்ய பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களையும் வலம்புரி சங்கையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## மாந்திரீகத்தின் உச்சகட்ட நம்பிக்கை

# தோண்ட தோண்ட கிடைத்த 4 சடலங்களால் பரபரப்பு



(டில்லி)

இந்தியாவின், கேரளாவில் இடுக்கி மாவட்டம் தொடுபுழா அருகே வண்ணபுரம் பகுதியை சேர்ந்தவர்கள் கிருஷ்ணன் (வயது-52) - சுசிலா (வயது-50) தம்பதியினர். இவர்களுக்கு ஆர்சா (வயது-21) என்ற மகளும், அர்ஜுன் (வயது-18) என்ற மகனும் உள்ளனர்.

கடந்த 4 நாட்களாக குடும்பத்தில் இருந்து யாரும் வெளி நடமாட்டமற்று இருந்ததால், அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்கள்.

இதனையடுத்து விரைந்து வந்த பொலிஸார் வீட்டினை திறந்து பார்த்து பொழுது, வீட்டுச்சுவர்கள் மற்றும் பல் கனி பகுதிகளில் இரத்தக் கறைகள் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பின்னர் தீவிரமாக செயற்பட்ட பொலிஸார் தோட்ட பகுதியில் நடத்திய தேடுதல் வேட்டையின் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவிக்கப்பட்டிருந்த மணல்மேடு மீது ஈக்கள் மொய்ப்பதை பார்த்து சந்தேகித்து அப்பகுதியை தோண்டுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

இதனையடுத்து உள்ளூர் மக்களின் உதவியுடன், அப்பகுதியை தோண்டும்பொழுது, 4 பேரின் உடல்களும் ஒருவர் மேல் ஒருவராக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

உடனடியாக அவர்களின் உடல்களை மீட்டு ஆய்வு மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்தில் கிருஷ்ணனின் முகம் முழுவதுமாக சேதப்படுத்தப்பட்டுள்ளதும், அவரது மனைவியின் மார்புப் பகுதியில் சேதப்படுத்தப்பட்டிருப்பதையும் கண்டறிந்தனர்.

அதே சமயம் அவரது பிள்ளைகள் இருவரினதும், உடல் முழுவதும் பலத்த காயங்கள் இருப்பதையும் கண்டறிந்தனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் அக்கம்பக்கத்தினர் பலரிடமும் விசா ரணை மேற்கொண்டதில், கிருஷ்ணனுக்கு பில்லி, சூனியம் போன்றவற்றில் அதிக நம்பிக்கை இருப்பதால் அவருடைய வீட்டிற்கு அடிக்கடி இரவு நேரங்களில் பலரும் வந்து செல்வதாக தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் கொலை செய்யப்பட்டிருந்த இடத்தில் இரும்புக்கம்பி உள்ளிட்ட ஆயுதங்கள் கண்டறியப்பட்டதால் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் சேர்ந்து இந்த கொலைகளை நிகழ்த்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7)

# ஆழ்துளை கிணற்றில் வீழ்ந்த குழந்தை மீட்பு

(சென்னை)

இந்தியாவின், பீகார் மாநிலத்தின் முன்கர் மாவட்டத்தில் 110 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை மீட்புக் குழுவினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

குறித்த இந்த மூன்று வயதுடைய் பெண் குழந்தையானது நேற்று முன் தினம் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த போது திறந்து கிடந்த ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்துள்ளது. இதனையடுத்து குழந்தையை மீக்க மீட்புப் படையினரால் 110 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணற்றின் ஓரப் பகுதியில் இயந்திரம் மூலமாக பாரிய குழியொன்று தோண்டப்பட்டு குழந்தையை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், மூச்சுத் திணறல் ஏற்படாமல் இருக்க குறித்த கிணற்றுக்குள் ஒட்சிசன் செலுத்தப்பட்டது.



இந்நிலையில், தொடர்ந்து 31 மணி நேரமாக இடம் பெற்ற மீட்புப் பணிகளினால் நேற்று முன்தினம் மாலை அந்த குழந்தை உயிருடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது. (7)

# கருணாநிதியின் நலம் விசாரிக்க ஜனாதிபதி நாளை சென்னை வருகை


(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நிலை குறித்து அறிவதற்கு, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சென்னைக்கு செல்லவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அவர் சென்னை செல்லவுள்ளதாக மத்திய அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி முதல் காவேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கருணாநிதியின் உடல் நலம் தேறி வருவதாக வைத்தியசாலை மற்றும் தி.மு.க. தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருணாநிதியை, பல்வேறு அரசியல் தலைவர்கள் மற்றும் நடிகர்கள் என பலர் நேரில் சென்று பார்வையிட்டு வருவதோடு, அண்மையில் துணை ஜனாதிபதியும் காவேரி வைத்தியசாலைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)



# சவுதிக்கூட்டுப்ப...

# பொது மக்கள் 3...

(சனா)

ஏமன் நாட்டில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.


ஏமன் நாட்டின் வட மேற்கு பகுதிகள் மற்றும் தலைநகர் சனா உட்பட நாட்டின் பெரும் பகுதிகளை ஹூதி கிளர்ச்சியாளர்களும், அதனுடைய கூட்டணி படையினரும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இதன் காரணமாக கடந்த 2014 ஆம் ஆண்டு ஏமன் ஜனாதிபதி மன்சூர் ஹாதி வெளிநாடு தப்பிச் செ...



# ரஷ்யா மீதான பொரு... இந்தியாவிற்கு அ...

# செனட்சபையில் ப...



(வோஷிங்டன்)

ரஷ்யா மீதான பொருளாதார தடையில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளது.

# அமெரிக்காவில் க... மக்கள் வெளியே...

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒரேகன் மாநிலத்தில் காட்டுத்தீ மிக வேகமாக பரவிவருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


அமெரிக்காவின் ஒரேகன் மாநிலத்தின் வடமேற்குப் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காட்டுத்தீ சடுதியாகக் பரவத் தொடங்கியதையடுத்து அப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட குறித்த காட்டுத்தீயின் காணொளிக்கிணாங்க, 80இற் கு...



# வெளிநாடு

# படைகள் தாக்குதல் ர் 30 பேர் உயிரிழப்பு!



னா சென்றுவிட்டார்.
பிச ஏமனில் மீண்டும் மன்சூர் ஹாதி

அரசை அமைக்கும் நோக்கில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சுன்னி இஸ்லாமியர்கள் கூட்டணி மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் கடந்த 3 ஆண்டுகளாக ஈரான் ஆதரவுடன் இயங்கும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிட்டு வருகிறது.

இந்நிலையில், ஏமனின் முக்கிய பகுதியான ஹூடேய்டாவில் உள்ள மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்கள் சந்தையில் சவுதி கூட்டணி படைகள் நேற்று தாக்குதலில் ஈடுபட்டன.

இதில், பொதுமக்கள் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், படுகாயம் அடைந்த 50 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏமனில் போரினால் பாதிக்கப்பட்டு உணவின்றி தவித்து வரும் 80 இலட்சம் மக்களுக்கு உணவு உள்ளிட்ட உதவிப்பொருட்கள் எடுத்துச்செல்லும் முக்கிய வழித்தடமாக ஹூடேய்டா துறைமுகம் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (7)

# சிம்பாவே வன்முறைகள் கண்டனத்துக்குரியவை

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கவலை



(ஹராரே)

சிம்பாவேயின் தலைநகர் ஹராரேயில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஹரியட் போல்ட்வின் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆளும் கட்சி தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து, போராட்டக்காரர்கள் மீது சிம்பாவே அரசு அடக்குமுறையை ஏவி வருகின்றது.

அரசின் இந்தப் பொறுப்பற்ற செயலுக்கு பிரித்தானியா தனது கண்டனத்தினையும் கவலையையும் தெரிவிக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளில் சிம்பாவே அரசாங்கம் நிதானமாகச் செயற்பட்டு மக்களது பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும். அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், சிம்பாவேயில் உள்ள பிரித்தானியர்களின் பாதுகாப்புக் குறித்து விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# பொருளாதாரத் தடையிலிருந்து அமெரிக்கா விலக்களிப்பு

## மசோதா நிறைவேற்றம்

மேலும் அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் இதற்கான மசோதா நிறைவேறியது.

ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவுடன் பிற நாடுகள் வர்த்தக உறவு வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நல்லுறவு நிலவி வருகிறது.

ரஷ்யாவிடம் இருந்து 4.5 பில்லியன் டொலர் மதிப்பிலான (சுமார் ரூ.30 ஆயிரத்து 600 கோடி) 5 'எஸ்-400 டிரையம்ப்' வான்பாதுகாப்பு சாதனங்களை வாங்குவதற்கு இந்தியா முடிவு செய்துள்ளது.

ஆனால், இந்தியா ரஷ்யாவிடம் வர்த்தகம் மேற்கொள்வதற்கு அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடை, முட்டுக்கட்டையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், ரஷ்யா மீது விதித்து உள்ள பொருளாதார தடை, இந்தியா உள்ளிட்ட அமெரிக்காவின் கூட்டாளி நாடுகளை (போர்தந்திர கூட்டாளி நாடுகள்) பாதிக்காமல் இருக்கும் வகையில், அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் மசோதா கொண்டு வரப்பட்டது.

இந்த மசோதா நேற்று முன்தினம் நிறைவேறியது. அதற்கு ஆதரவாக 87 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் விழுந்தன. செனட் சபையில் நிறைவேறிய நிலையில், ஜனாதிபதி ட்ரம்பின் ஒப்புதலுக்கு இந்த மசோதா அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. (7)

கு
து.

# சோதனைக்காக ஏவப்பட்ட போது வழிமாறி சென்ற அமெரிக்க ஏவுகணை

## விமானப்படை அதிகாரிகளால் அழிப்பு

(நியூயோர்க்)

சோதனையின் போது பறக்கும் போதே வழிமாறி சென்ற அமெரிக்க ஏவுகணையை விமானப்படை அதிகாரிகள் நடுவானத்திலேயே அழித்தனர்.



அமெரிக்க விமானப்படை கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அடிக்கடி சோதனை செய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று (மினிட்மேன் 3' என்ற ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. அமெரிக்காவின்வேண்டர்போர்க் போர் விமான தளத்தில் இருந்து இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.

தொடக்கத்தில் சரியான பாதையில் பறந்த ஏவுகணை திடீரென வழி மாறியது. விமானப்படை நிர்ணயித்து இருந்த புள்ளியை நோக்கி செல்லாமல் விலகிச் சென் றது.

இதனால் விமானப்படை அதிகாரிகளும், வீரர்களும் அதிர்ச்சி அடைந்தனர். உடனே விமானப்படை அதிகாரிகள் துரிதமாக வேலையில் இறங்கினர்.

வானத்தில் செல்லும் போதே தானாக வெடிக்க வைக்கும் வசதியை வைத்து ஏவுகணையை வெடிக்க செய்தனர்.

இதை அவ்வாறு வெடிக்க செய்திருக்காவிடில் அது வேறு எங்காவது விழுந்து வெடித்து இருக்கக் கூடும். இதன் மூலம் பெரிய அசம்பாவிதம் தடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து முறையான விசாரணை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# காட்டுத்தீ! யேற்றம்



ம் கும் அதிகமான கிராமப் பகுதிகள்

இக்காட்டுத் தீயினால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஒரேகன் மாநிலத்தின் தென்பகுதியிலுள்ள கலிபோர்னியாவைத், தொடர்ந்து தாக்கிவரும் காட்டுத் தீயானது 11 நாளாக சுடர் விட்டு எரிந்து வருகின்றது.

அதில் 6 பேர் உயிரிழந்ததோடு நூற்றுக்கணக்கான வீடுகளும் கட்டடங்களும் எரிந்து சாம்பலாகியுள்ளன. அவ்வாறான நிலையில், தற்போது ஒரேகன் மாநிலத்திலும் காட்டுத்தீ பரவியுள்ளது.

அமெரிக்காவில் சுட்டெரிக்கும் வெயிலுடன் காற்றும் பலமாக வீசுவதால் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதில் தீயணைப்பு வீரர்கள் சவால்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# சிம்பாவே ஜனாதிபதியாக மீண்டும் எமர்சன்

## தேர்தல் ஆணைக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பு

(ஹராரே)


சிம்பாவே ஜனாதிபதி தேர்தலில் எமர்சன் மனங்வாவா வெற்றியீட்டி மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நாட்டின் பத்து மாகாணங்களுக்குமான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், மனங்வாவா 50.8 வீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

ஜனாதிபதி எமர்சன் மனங்வாவாவை எதிர்த்து போட்டியிட்ட நெல்சன் சமிஸா 44.3 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளை பெற்றமையினால் சமிசாவுடன் இரண்டாம் கட்ட மோதலை எதிர்கொள்ள வேண்டிய தேவையை மனங்வாவா தவிர்த்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், இந்த தேர்தல் முடிவுகளுக்கு தலைவணங்குவதாகவும், இம்முடிவுகள் ஒரு புதிய ஆரம்பமாக அமையும் என மனங்வாவா தனது டுவிடர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



37 வருட கால முகாபேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர், சிம்பாவேயில் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதி தேர்தல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (7)

# பலாலி விமான சேவையை முன்னெடுக்க இந்திய நிறுவனங்கள் குறித்து ஆராய்வு

## தூதுவர் தரண்ஜித் சந்து தகவல்





(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பிரகாரம் பலாலி விமான நிலையத்திலிருந்து விமான சேவையை முன்னெடுக்க முடியுமான சில இந்திய விமான சேவை நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண்ஜித் சந்து தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பீம்ஸ் டெக் கூட்டுறவு மாநாட்டு அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பீம்ஸ் டெக் அமைப்பின் முக்கிய நோக்கமாக மக்களுக்கிடையிலான தொடர்பே காணப்படுகின்றது. இலங்கையுடன் எமக்கு பாரிய தொடர்புகள் உள்ளன. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனமானது இந்தியாவின் 14 நகரங்களுக்கு தனது சேவையை மேற்கொள்கின்றது. அதே போன்று இந்தியா இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் பங்காளராக இருக்கிறது.

இலங்கையின் ரயில்வே பாதைகளை மேம்படுத்தும் நோக்கில் 1.3 பில்லியன் டொலர்கள் உதவி வழங்கியுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் 70 வீதமான மாற்றீடுகளுடன் இந்தியா தொடர்புபட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்க இந்தியா கடனுதவி வழங்கியுள்ளது. அது எதிர்காலத்தில் சிறந்த வர்த்தக துறைமுகமாக இருக்கும்.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பிரகாரம் பலாலி விமான நிலையத்திலிருந்து விமான சேவையை முன்னெடுக்கும் நோக்கில் சில இந்திய விமான சேவை நிறுவனங்களுடன் கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இலங்கையும் இந்தியாவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்து கொண்டது. அது இரண்டு நாடுகளுக்குமே முதல் அனுபவமாக இருந்தது. அதன் பின்னர் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக தொடர்பு 8 மடங்கு அதிகரித்தது. அந்த வர்த்தக உடன்படிக்கையை மேலும் விரிவுபடுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் என்ன நடந்தாலும் முதலாவதாக ஈடுபடும் நாடாக இந்தியா இருக்கிறது. கடந்த வருடம் இலங்கையில் வெள்ளம் ஏற்பட்ட போது சில மணிநேரங்களில் இந்தியக் கப்பல்கள் இலங்கையை வந்தடைந்தன.

அதேபோன்று வரட்சியின் போதும் எமது நிலைப்பாடு அவ்வாறே இருந்தது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான பங்காண்மையின் பெறுமதி மூன்று பில்லியன் டொலர்களாகும். அதில் 500 பில்லியன் டொலர்கள் உதவியாகும். இலங்கையின் முக்கியத்துவத்திற்கு ஏற்பவே நாங்கள் உதவிகளை வழங்குகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசிற்கு எதிராக கொழும்பை அதிரவைத்த 'ஜனபல சேனா'









(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த பொது எதிரணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "ஜனபல சேனா" ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட மேற்படி ஆர்ப்பாட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆரம்பமாகி விகாரமாதேவி பூங்கா வரை சென்றது.

இதில் பொது எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

மத்தள விமான நிலையத்தை இந்தியாவிற்கு வழங்கக்கூடாது. பிணை முறி விவகாரம் தொடர்பில் பிரதமருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். மாகாணசபைத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் போன்ற விடயங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டதுடன் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதை நிறுத்துங்கள், இந்த அரசாங்கம் எமக்கு வேண்டாம், நல்லாட்சி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் எங்கே ஆகிய கோஷங்களும் எழுப்பப்பட்டன.

விகாரமாதேவி பூங்காவில் ஆர்ப்பாட்டம் நிறைவடைந்ததோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட பொது எதிரணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சிறிய செயல்களால் உயர முடியும்!

என்னுடன் வெளிநாட்டு டிரான்சிஸ்டர் ஒன்று பழுதடைந்து விட்டது. அதைச் சரி செய்ய நான் தலைகீழாய் நின்றது தான் மிச்சம். வெளி நாட்டுக்குத்தான் திருத்த அனுப்ப வேண் டும் என்றார்கள் உள்ளூர் வல்லுநர்கள்.

இதை ஒரு நண்பரிடம் நான் சொல்ல, அவர் பெரு முயற்சி எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்பி அதை திருத்தம் செய்து கொடுத்தார். எனக்கு அப்படி ஒரு மகிழ்ச்சி! கட்டணம் கேட்டேன். இனிமேல் தான் கணக்குப் பார்க்க வேண்டும் என்றார். உத்தேசமாக ஒரு தொகையை அனுப்பினேன். சில நாட்கள் கழித்து 47 ரூபா 50 சதம் அனுப்பி வைத்திருந்தார். கூடவே ஒரு கடிதம். இது நீங்கள் தந்த தொகையின் மீதம் என்று. இந்தச் சாதாரண தொகை அவரை என் இதயத்தின் உச்சாணியில் கொண்டு போய் வைத்து விட்டது.

இரண்டு ஊர்ப் பெரிய மனிதர்கள். இருவருள் யார் பெரியவர் என்கிற மறைமுகப் போட்டியும் உண்டு. இதை அந்த ஊர் மக்களும் கவனித்தே வந்தார்கள். ஒரு திருமணத்தில் வெவ்வேறு வரிசைகளில் அமர்ந்திருக்க, திடீரென பெரிய மனிதர்களுள் ஒருவர் எழுந்து திரும்பவும் தன் இருக்கைக்கு வந்துவிட்டார். மண்டபத்தில் அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கான மக்கள் தெளிவான முடிவுக்கு வந்துவிட்டார்கள். யார் பெரிய மனிதர்கள் என்று, அமர்ந்திருந்த இடத்திற்கே மற்ற பெரிய மனிதரை ஈர்த்தவரே பெரிய மனிதர் என்ற முடிவுக்கு வந்தார்கள்? இல்லை. எழுந்து போய் வணக்கம் சொன்னாரே அவர்தான் பெரிய மனிதர் என்றார்கள். ஆண்டாண்டு காலமாக நடந்த இந்தக் கௌரவப் போரில் மிக அழகாக வென்று விட்டார் இவர்.

பயணங்களின் போது சிறு சிறு உதவிகளைச் செய்கிறவர்கள் பிறரது எண்ணங்களில் உயர்ந்து நிற்கிறார்கள்.

மற்றவர்களின் மதிப்பில் உயர மாபெரும் தியாகங்களைத்தான் செய்து தீரவேண்டும் என்பதில்லை. சிறு சிறு செயல்களின் மூலமே இதைச் சாதித்துவிட முடியும்.

இவற்றில் ருசிகண்டு அங்கீகாரமும் பெருமையும் பாராட்டும் பெறத் தொடங்கிவிட்டால் பெரிய காரியங்களைச் செய்து உயர்வதற்கான வழி வகைகள் தாமே பிறந்துவிடும்!

லேனா தமிழ்வாணன்

# நீங்கள் அனைவரும் செய்தியாளராகலாம்!

செய்தியாளர்கள் என்ற எல்லை கடந்து பொதுமக்கள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் என சகலரும் செய்திகளை, தகவல்களை வழங்குகின்ற வாய்ப்பை வலம்புரி நாளிதழ் உங்கள் அனைவருக்கும் மகிழ்வோடு வழங்குகிறது.

எந்த வேளையிலும் நீங்கள் அறிந்த செய்திகள், தகவல்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் அவற்றின் புகைப்படங்கள் என்பவற்றை 24 மணி நேரமும் வலம்புரி நாளிதழுக்கு வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டை உங்கள் வலம்புரி செய்து தருகிறது. இவ்வாறு நீங்கள் தகவல்களை, செய்திகளை வழங்குவதன் மூலம்

- உங்கள் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள்
- உங்கள் நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்
- உங்கள் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புக்கள் புலமைப்பரிசில் திட்டங்கள்
- உயர் கல்வி நிறுவனங்களில் புதிதாக அறிமுகப் படுத்தப்படும் கற்கை நெறிகள், பயிற்சிகள்
- வங்கிகளில் மக்கள் பெறக்கூடிய குறைந்த வட்டிக் கடன்கள், இலகு கடன்கள்
- வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகின்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களைப் பெறுகின்ற வழிமுறைகள்

என்பவற்றை பொதுமக்கள் அறியவும் அதன்மூலம் நன்மை பெறவும் முடியும்.
இவ்வாறு தகவல்களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் பேருதவி புரிகின்றீர்கள்.

இதற்கு மேலாக...

- உங்கள் பிரதேசங்களில் நடக்கின்ற ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள்
- நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டிய விடயங்கள் இழுத்தடிக்கப்படும் சம்பவங்கள்
- சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
- புனரமைக்கப்படாத வீதிகள், பாலங்கள், போக்குவரத்துச் சீரின்மைகள் போன்ற பல விடயங்களையும் வெளிப்படுத்தி அவற்றைச் செப்பனிட முடியும்.

இதற்காகவே நீங்கள் அனைவரும் செய்திகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை வலம்புரி ஏற்பாடு செய்துள்ளது.
தேவையான இடங்களில் இரகசியம் நூறுவீதம் பாதுகாக்கப்படும்.

**நீங்கள் அறிந்த செய்திகளை, தகவல்களை, சம்பவங்களை, புகைப்படங்களை அனுப்புவதற்கு**

**தொலைபேசி:- 021 567 1541 / 070 220 2206**
**வைபர்:- 076 636 3378**
**தொலைநகல்:- 021 222 7829**
**E-mail:- valampuriijaffna@gmail.com**

தபால் முகவரி : **பிரதம ஆசிரியர் , வலம்புரி பத்திரிகை, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்.**

## அமைச்சர்கள், எம்.பிக்களின் சம்பள அதிகரிப்புக்கு ஜே.வி.பி.கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் மத்திய தர வகுப்பினர் பாவிக்கின்ற 1000 சி.சி.கொள்ளளவுக்கு உட்பட்ட வாகனங்களின் வரிகளை அதிகரிப்பு செய்துவிட்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் மாதாந்த சம்பளத்தினை அதிகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு மக்கள் விடுதலை முன்னணி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்குலைந்து காணப்படுகின்றமையால் அதில் மாற்றத்தை கொண்டுவருவதற்காக, அரச சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நாட்டின் பிரதான துறைமுகம் மற்றும் விமான நிலையங்களின் ஊடாக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்ப்பது கவலைக்குரிய விடயமாகும்எனவும்சுனில்ஹந்துநெத்தி தெரிவித்தார். (இ-7)

## பல்கலை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாண்வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொறியியல் பீட பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், நிர்வாகத்தினர் பல்கலைக்கழகத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இருப்பினும் தற்போது பல்கலைக்கழகம் மூடப்பட்டு மாணவர்களை வெளியேற உத்தரவிட்ட நிலையிலும் மாணவர்கள் வெளியேறாது தங்கி இருந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இளையோருக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தினரால் நடத்தப்பட்டு வரும் பிரதேச இளைஞர் முகாம்கள் வரிசையில் நல்லூர் பிரதேச இளைஞர் முகாம் திருநெல்வேலி முத் துத்தம்பி வித்தியாலயத்தில் மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சியாக நடத்தப்பட்டது.

இதன் இறுதிநாள் நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நல்லூர் பிரதேச இளைஞர்சேவைகள் உத்தியோகத்தர் இ.யுகராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக் கான் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களுடன், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (இ-89)

## மாகாணத் தேர்தல் எந்த முறையில் கட்சிகளிடையே இணக்கம் இல்லை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் எந்த முறையில் நடத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாடு இல்லை என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# 100 முறை உடற்பயிற்சியில் ஈடுபடுமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு




(பொலநறுவை)

பொலநறுவையில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றன.

இதில் பொலநறுவை நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட உடற்பயிற்சி நிலையத்தை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் உட்பட அரசாங்க அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவை உடற்பயிற்சியில் ஈடுபடுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார். ஒருமுறையன்றி 100 முறை உடற்பயிற்சி செய்ய வேண்டும் என ஜனாதிபதி பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய உடற் பயிற்சி செய்த பொலிஸ்மா அதிபரிடம் "போதும் போதும் நூறு முறை செய்தால்புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரைத் தேட வேண்டிய நிலை வரும் என ஜனாதிபதி நக்கலாக குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு நியாயமற்றது

(கொழும்பு)

வரிச்சுமையால் மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள ஒன்றிணைந்த எதிரணி, அது நியாயமற்ற செயல் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் தற்போது அவர்கள் பெற்றுக்கொள்ளும் கொடுப்பனவை விட, 215 சதவீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு 54 ஆயிரத்து 285 ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகவும் பிரதி அமைச்சருக்கான கொடுப்பனவு, 63 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவாகவும் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான கொடுப்பனவுகள் 65 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை மறைத்து மக்களை திசைதிருப்பும் ஒரு செயற்பாடே இதுவெனத் தெரிவித்துள்ளார். "ஒன்றிணைந்த எதிரணி இந்த விடயத்தில் ஏகமன தாக தீர்மானம்நிறைவேற்றியுள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்பு நியாயமற்றது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் இது தொடர்பில் நாம் எமது எதிர்ப்பினை வெளியிடுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிறமூட்டப்பட்ட தரமற்ற பருப்பு வகைகள் விற்பனை

(கொழும்பு)

நிறமூட்டப்பட்ட, தரமற்ற பருப்பு வகைகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றமை தெரியவந்துள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் இவ்வாறான தரமற்ற நிறமூட்டப்பட்ட பருப்புவகைகள் விற்பனை செய்யப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இந்த பருப்பை கழுவும் போது நீர் சிவப்பு நிறமாக மாறும். இந்த பருப்பு மிகவும் சிறியதாகும். பருப்பை வேகவைக்க வழமையை விட கூடுதலான நேரம் எடுக்கும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். இவ்வாறான பருப்பு வகைகள் தொடர்பாக பிரதேசத்திலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடு செய்யுமாறு அந்தச் சங்கம் கோரியுள்ளது. (இ-7)

# இலங்கை மருத்துவ சபையின் தலைவர் திடீர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை மருத்துவச் சபையின் தலைவர். பேராசிரியர் கொல்வின் குணரத்ன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ சபையில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகள் காரணமாகவே தாம் பதவியை இராஜினாமா செய்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்திய சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகாவின் பதவிக் காலம் நிறைவடைந்ததையடுத்து. குறித்த பதவிக்கு கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கொல்வின் குணரத்ன நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 3 விதி எண் 3

முழு குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் மற்றவர்களின் அறிவுக் கண்களைத் திறப்பார்கள். இயற்கையாகவே நீதி, நேர்மை, நாணயம், தன்னம்பிக்கை, நல்லெண்ணம் உடையவர்கள். பிறரை வசீகரிக்கக்கூடிய தன்மையுடையவர்கள். பல நல்ல உதவிகள் இவர்களைத் தேடி வரும். ஞாபகசக்தி அதிகம் உடையவர்கள். இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்குவார்கள். இரட்டை நாடி கொண்டவர்கள். சிறந்த தோள் வலிமை உடையவர்கள். மெல்லிய தலைமுடியிருக்கும். இளமையிலேயே வழுக்கையாகக் காட்சியளிப்பார்கள். முன் பற்கள் இரண்டு பெரிதாகக் காட்சியளிக்கும். முத்துப் போன்ற பற்கள் கொண்ட இவர்கள் சிரிக்கும்போது பார்க்க அழகாக இருக்கும். எழுத்தும், பேச்சும் பொருள் சேர்க்கும். ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்கள்.

பலபேர் சூழ வாழ்ந்து கொண்டிருப்பார்கள். மக்கள் தலைவனாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். நல்ல உடல்பலமும் வானம் பார்த்த கம்பீரமும் இருக்கும். மூக்குச் சாய்வுக் கோணத்தில் கூர்மையாக இருக்கும். மற்ற எண்காரர்களைவிட இவர்களை எளிதில் அடையாளம் தெரிந்து கொள்ளலாம். சுறுசுறுப்பான நடையுடையவர்கள். ஜோதிடம், மருத்துவம், விஞ்ஞானம் அறிந்தவர்கள். இளமையிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்பார்கள். தனக்கு சிறந்த எதிர்காலம் உண்டு என்று நம்பி வாழ்ந்து கொண்டிருப்பார்கள். தர்மத்தின் தலைவனாகவும், பொது நலமுடைய அமைப்பினை பொறுப்புடன் நடத்தும் சிறப்புடைய மனிதராகவும் இருப்பார்கள். சட்டவிரோதமான செய்களில் ஈடுபடவே மாட்டார்கள். நடை உடை பாவனைகளில் தனிக்கவர்ச்சி இருக்கும். மற்றவர்கள் மனத்தைப் புண்படுத்தவே மாட்டார்கள். மனோசக்திகள் கூடி உடல் முழுவதும் வியாபித்திருக்கும். வசீகரமான பார்வை மின்காந்த சக்தியுடன் மற்றவர்களைக் கவரும் விதத்தில் இருக்கும். இவர்களின் பேச்சைக் கேட்டுப் பிரமித்துப் போன நபர்கள் ஏராளம்.

மெய்சிலிர்க்க வைக்கும் பேச்சுத் திறமையுடையவர்கள். விளக்கமான அறிவுரைகளைச் சுருக்கமாகச் சொல்லிப் புரியவைப்பார்கள். தனக்குக் கீழ் பலபேர் வேலை செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள். கடவுள் பக்தி அதிகம் கொண்ட இவர்கள் தன்னுடைய மதம் வளர்ச்சியடைய ஆலயம் கட்டுவது போன்ற திருப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். பிறர் தன்னை மெச்ச வேண்டுமென்பதற்கு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார்கள். ஆரம்ப வாழ்க்கை போராட்டமாக இருந்தாலும் பிற்கால வாழ்க்கை முன்னேற்றத்துடன் காணப்படும். வசனங்களைக் கம்பீரமாக உச்சரிப்பார்கள்.

இவர்கள் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்கள். இவர்கள் பேச்சைக் கேட்க ஒரு பெருங் கூட்டமேயிருக்கும். பணவசதி எப்போதும் இருக்கும். தனக்கு, பிறருக்கு என்று வேறுபாடு இல்லாது அனைவருக்



கும் செலவளிப்பார்கள். பணத்தட்டுப்பாடு இருக்காது. இவர்கள் கையில் எப்போதும் பணம் வந்து போயிருக்கும். தன்னுடைய பணம், பிறருடைய பணம் இரண்டும் இருக்கும். இவர்களுக்குக் கொடுக்கல்-வாங்கல் தொழில் மூலம் அதிகமான பணம் சேரும். தனகாரகத் தன்மை உடையவர்கள். பெரிய தனவான்கள். நிதி நிறுவன வளர்ச்சி மீது அதிக கவனம் இருக்கும். கலை காவியத்தில் சிறப்புண்டாகும். முன்னோர்கள். வழியைப் பின்பற்றி நடப்பார்கள். இவர்களின் முன்னேற்றம் நாளுக்கு நாள் விருத்தியாகும். நிதானமாகச் செயற்பட்டு வெற்றி காண்பார்கள். அமைதியையும், தனிமையையும் பெரிதும் விரும்புவார்கள். பலர் இவர்களை நம்பி தங்கள் உடைமைகளை ஒப்படைப்பார்கள்.

தூய்மையை விரும்புவார்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீருவார்கள். பிறருடைய உண்மையான மனநிலையை அறிந்த பின்னரே ஆழ்ந்த நட்பு வைத்துக் கொள்வார்கள். ஆயகலைகளில் நல்ல தேர்ச்சியடைவார்கள். இறையுணர்வு மிகுந்திருக்கும். சாஸ்திர சம்பிரதாயங்களில் நல்ல ஈடுபாடு இருக்கும். எவ்வளவு சொத்துக்களைச் சேர்த்தாலும் ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்கள். யோகா மற்றும் தியானம் செய்யும் பழக்கமிருக்கும். மூட்டு வலிகள் வந்து போகும். புன்னகை மாறாமல் இருப்பார்கள். சிந்தனைச் சிதறல்கள் உண்டாகும் போது நோய் உருவாகிவிடும். புத்தகப் பிரியர்கள்.

எந்த இடத்திற்குச் சென்றாலும் ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருப்பார்கள். தெய்வ சிந்தனையின் மீது ஈர்ப்பு இருக்கும். பொறுப்புகள், கடமையாற்றுவதில் வல்லவர்கள். அறிவுள்ள வாழ்க்கைத் துணை அமையும். சுற்றுலாப் பிரியர்கள். நல்ல சிந்தனையாளர்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,9,18,27,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூ நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், எமிதிஸ்ட், மாணிக்கம்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

09



பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

இருந்தபோதிலும் பல்வேறு வரலாற்று மூல ஆதாரங்களையும், வரலாற்று அறிஞர்களின் முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது. இவ் அத்தியாயம் தென் இந்தியாவில் முதன்மை பெற்றிருந்த பல்லவர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் செல்வாக்கும், தலையீடும் இலங்கையின் அரசியலில் குறிப்பாகத் தமிழரின் அரசியலில் மத, மொழி, கலை, கலாசார, பொருளாதார விடயங்களில் எவ்வாறான தாக்கங்களையும், விளைவுளையும் ஏற்படுத்தியது என்பதனையே முக்கிய கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இவ்விடயங்கள் தொடர்பாகத் தமிழ்நாட்டில் இதுவரை கிடைக்கப் பெற்ற இலங்கை தொடர்பான பல்லவர் காலக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், சிற்பங்கள், கட்டடக்கலை என்பவற்றை, இலங்கையிற் கிடைக்கப் பெற்ற மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்று மூலங்களோடு தொடர்புபடுத்தி இருண்ட காலத் தமிழரின் வரலாறு பற்றிய ஒரு தெளிவினைக் கொடுக்க முடியுமான வரை முயற்சி செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயம் கி.பி 900-1200 வரையுள்ள காலப் பகுதியைக் கொண்டதாகவும் குறிப்பாக சோழர் ஆதிக்கம் இலங்கையில் இடம்பெற்றமை பற்றிய வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. அத்தோடு இலங்கையில் சோழராட்சி முடிவுக்கு வந்தபின் எவ்வாறு தமிழர் தமது ஆரம்ப அரச அமைப்புகளை ஒருங்கிணைத்து, 13ஆம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தனர் என்பது பற்றிய விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அத்தோடு தமிழர்களின் சமூக, சமய, மொழி, கலாசார, பொருளாதார அபிவிருத்திகள் சோழர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் எவ்வாறு செழிப்படைந்து ஒரு பலம்வாய்ந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தன என்பன பற்றிய விடயங்களும் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ் அத்தியாயத்தில் சிறப்பாக இலங்கையிலும், தென் இந்தியாவிலும் சோழர் காலத்திலுள்ள கல்வெட்டு, ஆதாரங்கள் பெருமளவிற் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

நான்காவது அத்தியாயம் கி.பி 1200 தொடக்கம் கி.பி 1500 வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கியதாகும். இது சிறப்பாக, யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி, மேலாண்மை, வன்னிச் சிற்றரசுகளின் அரச கட்டுமானங்கள், பொருளாதார செழிப்பு, சமய, மொழி, கலாசார எழுச்சி போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஐந்தாவது அத்தியாயம் கி.பி 1505-1658 கள் வரை இலங்கையில் ஐரோப்பியரான போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும், அவர்கள் எவ்வாறு தமிழ்ப் பிரதேசங்களில் தமது கால்பதித்தார்கள் என்பது பற்றியும் சிறப்பாகப் போர்த்துகீச மூலாதாரங்களில் உள்ள முக்கியமான குறிப்புகளை ஆதாரமாக வைத்து ஆராயப்பட்டுள்ளது.

> “கோவில்களும், கல்வி கலாசார மையங்களும் அழித்தொழிக்கப்பட்டு அவர்கள் மதமாகிய கத்தோலிக்கத்தை வலுக்கட்டாயமாக தமிழ் மக்களிடம் பரப்புகின்ற விடயத்தில் மிகக் கொடூரமாக நடந்து கொண்டார்கள் என்பது பற்றி மிகவும் தெளிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.”



சங்கானைக் கோட்டை

அத்தோடு போர்த்துக்கீசர் எவ்வாறு யாழ்ப்பாண இராச்சியத்தையும், கிழக்கிலுள்ள தமிழர் அரசுகளையும் அழித்து தமது ஆட்சியை ஏற்படுத்தினார்கள் என்பது பற்றியும் மிகத் தெளிவாக ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது. போர்த்துக்கீசனின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது எவ்வாறு தமிழ் அரசர்களின் மாளிகைகளும், அரச நிறுவனங்களும், நூற்றுக்கணக்கான இந்துக் கோவில்களும், கல்வி கலாசார மையங்களும் அழித்தொழிக்கப்பட்டு அவர்கள் மதமாகிய கத்தோலிக்கத்தை வலுக்கட்டாயமாக தமிழ் ம்க்களிடம் பரப்புகின்ற விடயத்தில் மிகக் கொடூரமாக நடந்து கொண்டார்கள் என்பது பற்றி மிகவும் தெளிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழர்களின் பொருளாதர வளங்களை எவ்வெவ் வழிகளில் எல்லாம் சுரண்ட முடியுமோ அவ்வவ் வழிகளில் எல்லாம் சுரண்டித் தமிழ் மக்களின் செல்வங்களையெல்லாம் சூறையாடி அவர்களையும் தமிழ்ப் பிரதேசங்களையும் வறுமைக்குள் தள்ளிவிட்டு, இறுதியில் அடுத்த ஆக்கிரமிப்பாளரான டச்சுக்காரர்களிடம் நாட்டைப் பறிகொடுத்து விட்டுப் போய் விட்டார்கள் என்பது பற்றி பெறுமதி வாய்ந்த விபரங்களை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

மிகவும் திடுக்கிடும் வரலாற்றுச் சம்பவங்களையும் ஆச்சரியப்படக் கூடிய நடவடிக்கைகளையும் அருவருக்கத்தக்க முறைகேடான நடைமுறைகளையும் போர்த்துக்கீச இராணுவமும், போர்த்துக்கீச அதிகாரிகளும், கத்தோலிக்க மதகுருமார்களும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் மத்தியில் நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதை முதன் முறையாக உலகத்திற்கு கூறுகின்ற அத்தியாயமாக இது அமைகிறது என்று துணிந்து கூறலாம்.

ஆறாவது அத்தியாயம் கி.பி 1658 தொடக்கம் 1796கள் வரை, இரண்டாவது ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளரான டச்சுக்காரர் போர்த்துக்கீசரை நாட்டை விட்டு வெளியேற்றித் தமிழ்ப் பிரதேசங்களில் எவ்வாறு நிலை கொண்டார்கள் என்பது பற்றியும் தமிழர் மத்தியிலும் சுமார் 150 வருடங்களாகத் தமிழர் பிரதேசங்களை எவ்வாறு ஆட்சி செய்தார்கள் என்பது பற்றியும் கூறும் அத்தியாயமாகக் காணப்படுகின்றது.

இவ் அத்தியாயம் பெருந்தொகையான டச்சு ஆவணங் களை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பட்டதாகும். முதற் தடவையாக டச்சுக்காரரின் மூலாதாரங்களைப் பூரணமாக ஆய்வு செய்து முழுக்க முழுக்க அவைகளை ஆதாரமாகக் கொண்டு இவ் அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது. தமிழர் மத்தியிலும் தமிழ் பிரதேசங்களிலும் உள்ள வளங்களையெல்லாம் சுரண்டிச் செல்வம் சேர்ப்பதிலேயே டச்சுக்காரரின் முழுக்கவனம் குவிந்திருந்தது.

அவை பற்றிய மிகத் தெளிவான விளக்கங்கள் புள்ளி விபரங்களோடு இவ் அத்தியாயத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளன அத்தோடு அவர்கள் எவ்வாறு தமது புரட்டஸ்தாந்து மதத்தைத் தமிழர் மத்தியிலும், தமிழ்ப் பிரதேசங்களிலும் பரப்பினார்கள் என்பது பற்றியும் மிகவும் தெளிவாகக் கலந்துரையாடப்பட்டது. இது வரையும் தமிழ்ப் பிரதேசங்களில் டச்சுக்காரர் ஆதிக்கம், அவர்களின் பொருளாதாரச் சுரண்டல், தமிழர் மத்தியில் மதப் பரம்பல் நடவடிக்கைகள் என்பன பற்றி எதுவித புலமைசார் வெளியீடுகளும் வெளிவராத நிலையில் இவ் அத்தியாயம் பல புதிய திடுக்கிடும் தகவல்களை உள்ளடக்கி வரலாற்று அறிவுக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

ஏழாவது அத்தியாயம் கி.பி 1796 இல் இருந்து 1850 கள் வரையுள்ள காலப்பகுதியைக் கொண்டுள்ளது. போர்த்துக்கீசரும், டச்சுக்காரரும் தமது பொருளாதார நலன்களுக்காகவும் தமது மதங்களைப் பரப்புவதற்காகவும் இலங்கையைக் கைப்பற்றி, தமது நோக்கங்களை நிறைவேற்றினர். ஆனால் பிரித்தானியர் மேற்படி நோக்கங்களுடன் இலங்கையை நிரந்தரமாக ஆள வேண்டும் என்ற தமது காலனித்துவக் கொள்கையையும் மிகவும் பிரதானமாகக் கொண்டு காணப்பட்டார்கள்.

ஐரோப்பியரான பிரித்தானியர் டச்சுக்காரரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றி குறிப்பாகத் தமிழ் பிரதேசங்களை ஆட்சி செய்தமை பற்றியும், அக் காலகட்டத்தில் தமிழரின் சமய, கலாசார, சமூக, மொழி, பொருளாதார நிலைமைகள் எவ்வாறு காணப்பட்டன என்பது பற்றியும் அமைந்த வரலாற்றை உள்ளடக்கியதாகும்.

இவ் அத்தியாயம் பெரும்பாலும் பிரித்தானிய காலத்துக்குரிய மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு இந் நூலாசிரியரால் ஏற்கனவே ஆய்வு செய்து வெளியிடப்பட்ட நூலில் உள்ளவற்றையும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவற்றையும் உள்ளடக்கிய அத்தியாயமாக அமைகிறது. (தொடரும்)

## இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட

# 3 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் மூவர் கைது



(சென்னை)

இலங்கையிலிருந்து கடத்திச்செல்லப்பட்டதாக கூறப்படும் 3.32 கோடி இந்திய ரூபா பெறுமதியான தங்கத்துடன், மூன்று பேர் தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய ஊடகமொன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இராமநாதபுரத்திலிருந்து நேற்று முன்தினம் மதுரை பேருந்தில் சென்ற குறித்த மூவரின் பயணப் பொதியிலிருந்து 11.15 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டதாக இந்திய வருமானவரித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த தங்கம் கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு கடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தங்க கடத்தலின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும்தெரிவித்துள்ளனர்.(இ-7)

## நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட வாகனங்களைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாது காணப்படுகின்ற பின்வரும் மோட்டார் சைக்கிளகளை அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் இரண்டு மாதங்களுக்குப் பின் அரசுடைமையாக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

NP VZ 8869 மோட்டார் சைக்கிள், NP JG 6476 மோட்டார் சைக்கிள், NP WP 3851 மோட்டார் சைக்கிள், NP GY 9814 மோட்டார் சைக்கிள்,NP HM 7460 மோட்டார் சைக்கிள், NP XD 9958 மோட்டார் சைக்கிள், NP MD 9522 மோட்டார் சைக்கிள்.

மேலும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பருத்தித்துறைப் பொலிஸாரினால் துவிச்சக்கரவண்டி ஒன்று பாரப்படுத் தப்பட்டுள்ளது.

எனவே அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவ ணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறும்தவறின்2மாதங்களுக்குப் பின் அரசுடைமையாக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, ஆயித்தியமலைப் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கிலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஆயித்தியமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆயித்தியமலை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தையான மாமாங்கம் சண்முகராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கரடியனாறு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஆயித்தியமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## 1990 சுகப்படுத்தும் சேவை பற்றிய தெளிவூட்டல்






(சாவகச்சேரி)

1990 சுகப்படுத்தும்சேவை பற்றிய தெளிவூட்டல் நிகழ்வுகள் சாவகச்சேரியில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும், வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும், வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் இந்த தெளிவூட்டல் நிகழ்வு இடம் பெற்றது.

இந்தச் செயலமர்வானது சுகப்படுத்தும் சேவையின் சாவகச்சேரி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்படுகிறது.

பலரும் இன்னமும் இலவச சுகப்படுத்தும் சேவை பற்றி முழுமையாக தெளிவடையாத நிலையில் காணப்படுவதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (இ-30)

## றிசாத்தின் மனு நிராகரிப்பு



(கொழும்பு)

வில்பத்து சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் காடழிப்பு தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீனால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அமைச்சர் றிசாத் பதியுதீன் குறித்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனுவே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1478

### செல்வா

நீங்கள் வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் வறுமைக்குத் தள்ளிவிடும்



### சுதாகர்


உனது கோபம் உன்னை நேசிப்பவர்களையும் வெறுப்படையச் செய்யும்



உனது அன்பு உன்னை வெறுத்தவர்களையும் நேசிக்கச் செய்யும்

### மணிகண்டன்

என்ன வாழ்க்கைனு ஏங்கிட்டுப் போகாம



இதுதான் வாழ்க்கைனு தாங்கிட்டு போயிடனும்


### முருகதாஸ்

விளையாட்டை நாம் என்று நிறுத்திக் கொள்கிறோமோ அன்று ஆரம்பிக்கிறது வாழ்க்கை நம்முடன் விளையாட



### விதுசன்

உண்மையான அன்பைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது



உரியவர்கள் மட்டுமே உணரமுடியும்!!!

### ஜெனகன்

பறவை நம்புவது கிளைகளை அல்ல, அதன் சிறகுகளை



அதேபோல் உன் மேல் நம்பிக்கை வை வாழ்க்கை சிறக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுபோகத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 36 விவசாயிகளுக்கு மானிய உரம் விநியோகம்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோகத்தின் போது ஆயிரத்து 889.5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட ஆயிரத்து 36 விவசாயிகளுக்கு மானிய உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மிக குறைந்த அளவிலேயே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய,நடுத்தர மற்றும் சிறுகுளங்கள் என்பனவற்றில் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்களின் கீழ் வருடாந்தம் 59 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் சிறுபோகத்தில் ஏறத்தாழ 12 ஆயிரம் ஏக்கரிலும் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போதைய வரட்சி காரணமாக ஆயிரத்து 889.5 ஏக்கர் நிலப்பரப்பில மட்டும் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் விவசாயிகளுக்கான மானிய உரம் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இவ்வாண்டு சிறுபோகத்திற்கான உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் கீழ் 514 விவசாயிகளுக்கும் உருத்திரபுரம் கமநலசேவை நிலையத்தின் கீழ் 355 விவசாயிகளுக்கும் இராமநாதபுரம் கமநலசேவை நிலையத்தின் கீழ் 167 விவசாயிகளுக்கும் என மொத்தமாக ஆயிரத்து 36 விவசாயிகளுக்கு ஆயிரத்து 889.5 ஏக்கர் பயிர்ச்செய்கைக்கான மானிய உரமாக 23 இலட்சத்து ஆறாயிரத்து 993 கிலோ உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (2-315)

## வாடியடி நகர்ப்பகுதியிலுள்ள தனியார் காணியில் வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கை

### நகர்ப்பகுதியில் வியாபாரம் செய்வதற்கு தடை பூநகரி பிரதேசசபை தவிசாளர்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தை வியாபாரிகள் இரு நாட்கள் தமது சந்தை வியாபாரத்தை புறக்கணித்து தமது கோரிக்கையை பிரதேச சபை நிர்வாகத்திடம் தெரிவித்திருந்தனர்.

இதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவித்து தமது வியாபார நடைவடிக்கைகளைப் பூநகரி கடைத்தொகுதிகள் உள்ளடங்கிய வாடியடி நகர்ப் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் நேற்று முன்தினம் கூடாரங்களை அமைத்து வியாபாரத்தை ஆரம்பித்தனர்.

நகர்ப்பகுதியில் பெருந்திரளான மக்கள் வருகை தந்து காய்கறிகளை கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பழைய சந்தை மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த பிரதேச சபை தவிசாளர் அ.ஜயம்பிள்ளை எந்த வியாபாரிகளும் நகர்ப்பகுதியில் மரக்கறிவகைகளை வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கபட மாட்டார்கள். மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை வாடியடி நகர்ப்பகுதியிலும் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தையிலும் இரு பிரிவாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் தமக்கும் மக்களுக்கும் பெரும் சிரமம் ஏற்படுவதாகவும் உரிய நடவடிக்கை எடுத்து ஒரே இடத்தில் வியாபாரம் நடைபெற ஆவன செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடப்பட்டும் இரு நாட்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் அனைத்து வியாபாரிகளும் தாம் ஒருமித்த நிலையில் பூநகரி வாடியடி நகர்ப்பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் வியாபார நடவடிக்கைகளை கடந்த இரு நாட்களாக நடத்திவருவதாக சந்தை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (2-84)

## மனித புதைகுழி எச்சங்கள்

# மன்னாரில் 440 பைகளில் இலக்கமிட்டு பொதியிடல்

## இரு மோதிரங்கள் தடயங்களாக கண்டெடுப்பு

(மன்னார்)

மன்னார் சதொச விற்பனை நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித புதைகுழி அகழ்வில் தற்போதும் மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த வளாகத்தை விரிவுபடுத்தி அகழ்வு செய்யும் பணிகளும் இடம் பெற்று வருகின்றது.

குறித்த அகழ்வுப் பணியானது நேற்று 47 ஆவது தடவையாக இடம்பெற்று வருகின்றது. தற்போது அகழ்வு பணியானது மையப்பகுதியை விடுத்து வளாகத்தின் நுழைவு பகுதியிலேயே அதிக கவனம் செலுத்தி தோண்டப்படுகின்றது.

அத்துடன் இவ்விடத்துக்கு அருகாமையிலுள்ள நடைபாதையில் ஐந்து அடி ஆலத்திற்கு அகழ்வை விரிவுபடுத்திய இடத்திலேயும் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இந் நிலையில் நேற்றும் சந்தேகத்திற்குரிய மனித



எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த வளாகத்தில் இரு வேறு பகுதிகளில் வித்தியாசமான நிலையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி வளாகத்தின் மையப்பகுதியில் எந்த வித குழப்பமும் இன்றி ஒழுங்கான நிலையில் புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் சிலவும் அதே நேரத்தில் வளாகத்தின் நுழைவு பகுதியில் ஒன்றுடன் ஒன்று செருகிய விதமாகவும் அவசர அவசரமாக புதைக்கப்பட்ட விதத்திலும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இதுவரை குறித்த வளாகத்தில் இருந்து 66 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் 56 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை மீட்கப்பட்ட 56 மனித எச்சங்களும் 440 பைகளில் இலக்கங்கள் இடப்பட்டு பொதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் இவ்வாரத்தில் இரண்டு மோதிரங்கள் தடயப் பொருட்களாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு நோயாளர்கள் சிகிச்சைக்காக காத்திருப்பு



(மன்னார்)

சிங்கப்பூர் அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 24 மணி நேர அடையாள பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

இதற்கமைய மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் தூர இடங்களில் இருந்து பல்வேறு மருத்துவ தேவைக்காக மன்னார் பொதுவைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள்பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

குறிப்பாக சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணி தாய்மார்கள், வயோதிபர்கள் என பல தரப்பினரும் நீண்ட நேரம் காத்து நின்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் சென்றனர்.

மேலும் நேற்றைய தினம் மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் விடுதிச் சேவைகள் மட்டுமே செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்களும் நேற்று ஒருநாள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால் நோயாளர்கள் பலரும் விரக்தியுடனும் ஏமாற்றத்துடனும் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் விடுதிச் சேவை மட்டும் தொழில்பட்டதுடன், ஏனைய மருத்துவ சேவைகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளிலும் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# பால் கொள்வனவுக்கான கொடுப்பனவு வழங்கல்

## சிறிதரன் எம்.பி.கடிதம்

(கிளிநொச்சி)

வடக்குமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து நாளாந்தம் ஏறத்தாழ 5 ஆயிரம் லீற்றர் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.

பாலுக்கான கொடுப்பனவு 15 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ஒன்றரை மாதமாக இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் பால் விற்பனையே தமது பிரதான சீவனோபாயமாகக் கொண்டு வாழும் சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பாரிய இடர்களை சந்தித்துள்ளனர்.

ஆதலால் பண்ணையாளர்களுக்கான கொடுப்பனவுகளை குறித்த காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீன்பிடி நீரியல் வளத்துறை மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சாவிற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்கடிதம்ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மல்லாவி, செட்டிகுளம், முருங்கன் ஆகிய பால் குளிரூட்டும் நிலையங்களில் நாளாந்தம் ஏறத்தாழ ஐயாயிரம் லீற்றர் பால் குளிரூட்டப்படுகிறது.

சாவகச்சேரியில் 411 பண்ணையாளர்களும் கிளிநொச்சியில் 1496 பண்ணையாளர்களும் முல்லைத்தீவில் 1650 பண்ணையாளர்களும் ஒட்டுசுட்டானில் 1068 பண்ணையாளர்களும் மல்லாவியில் 658 பண்ணையாளர்களும் செட்டிகுளத்தில் 486 பண்ணையாளர்களும் முருங்கனில் 1376 பண்ணையாளர்களுமாக வடக்கு மாகாணத்தில் ஏழாயிரத்து நூற்று நாற்பத்தைந்து பண்ணையாளர்கள் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்கின்றார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நீண்டிருந்த போரினால் அனைத்தையும் இழந்து மீளக்குடியேறிய பின்னர் வாழ்வாதார உதவித்திட்டங்கள் மூலமும் வங்கிக்கடன்களைப் பெற்றும் பால்மாடுகளை கொள்வனவு செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தமது வாழ்க்கைச் செலவை நிர்வகிக்கும் இப்பண்ணையாள் தொடர்ச்சியாக தமது குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும் பொருளாதார ரீதியாக அல்லல்ப்படுகிறார்கள்.

எனவே இவ்விடயத்தில் தாங்கள் அதிக அக்கறை காட்டி வடக்கு மாகாணப் பண்ணையாளர்களுக்கான கொடுப்பனவுகளை குறித்த காலப் பகுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சிறுவர் அரங்கம்

## பலமும் பலவீனமும்

ஓடைக் கரையில் இருந்த பொந்தில் ஆமை வசித்து வந்தது. அதற்குப் பக்கத்தில் உள்ள புற்றில் ஒரு நாகம் குடியிருந்தது. ஆமையும் நாகமும் நண்பர்கள். இரண்டும் சேர்ந்தே இரை தேடப் போவதும் சேர்ந்தே இருப்பிடத்துக்குத் திரும்புவதுமாக இருந்தன.

அன்று காலை ஆமையும் நாகமும் ஓடைக்கரை புல்வெளியில் இரை தேடிக்கொண்டிருந்தன. அப்போது மனிதக் காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தது ஆமை. ஒரு மனிதன் கையில் கம்புடன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த ஆமை நாகத்திடம், "ஆபத்து வேகமாக ஓடி மறைந்து கொள்" என்றது. ஏன் என்று கேட்டது நாகம்.


"அதோ கம்புடன் வந்து கொண்டிருக்கிறார் ஒருவர். அவர் நம்மைப் பார்த்தால் அடித்துக் கொன்றுவிடுவார்" என்றது ஆமை.

"அவருக்கு நீ வேண்டுமானால் பயப்படலாம். நான் பயப்படமாட்டேன். என் பல்லில் கொடிய நச்சு இருக்கிறது. நான் கடித்தால் அவருக்கு இறப்பு உறுதி. அதனால் அவர்தான் என்னைப் பார்த்து பயந்து ஓட வேண்டும்" என்றது நாகம்.

காலடி ஓசை அருகில் கேட்டது. ஆமை தனது கால்களையும் கழுத்தையும் உள்ளே இழுத்துக் கொண்டு அசையாமல் கிடந்தது. அசைவு இல்லாததால் அந்த மனிதரின் பார்வை அதன் மீது பதியவில்லை. பெரிய இலைச் சருகு என்று நினைத்துவிட்டார். அதனால் ஆமை கிடந்த இடத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்.

மெதுவாகக் கழுத்தை வெளியே நீட்டிப் பார்த்தது ஆமை.

அருகில் வந்துவிட்ட அந்த மனிதரைப் பார்த்த நாகம், சீறிக்கொண்டே தலையை உயர்த்தி படத்தை விரித்தது. அதைப் பார்த்ததும் சட்டென்று தனது கையில் இருந்த கம்பால் நாகத்தை அடித்தார். அந்த அடி, நாகத்தின் உடலில் பலமாக விழுந்தது. ஐயோ என்று அலறிக்கொண்டே கோரைப் புற்களுக்கு இடையில் புகுந்து, ஊர்ந்து போனது நாகம். அவரும் நாகம் போன வழியில் தொடர்ந்து கோரைப் புற்களை விலக்கிப் பார்த்துக்கொண்டே விரைந்தார். அடிபட்ட நாகம், தப்பித்தால் போதும் என்று புதருக்குள் ஓடி ஒளிந்துகொண்டது. பாம்பைத் தேடி அலுத்துப் போன அவர், திரும்பிச் சென்றுவிட்டார்.



நாகத்தைத் தேடிவந்தது ஆமை. புதரைவிட்டு வெளியில் வந்த நாகம், "நண்பா, அந்த மனிதர் என் முதுகில் பலமாக அடித்து விட்டார். இன்னொரு அடி விழுந்திருந்தால் நான் செத்திருப்பேன்" என்றது.

"நல்லவேளை, தப்பித்து விட்டாய். அது போதும். காயத்தை ஆற்றி விடலாம் வா" என்று அதற்கு ஆறுதல் கூறி அழைத்துச் சென்றது ஆமை.

ஒரு மாதத்துக்குப் பிறகு, வழக்கம் போல் ஆமையும் நாகமும் புல்வெளியில் இரை தேடிக் கொண்டிருந்தன. காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தது ஆமை. முன்பு பார்த்த அதே மனிதர் வந்துகொண்டிருந்தார். ஆனால் இப்போது அவரது கையில் கம்பு இல்லை.

நாகத்தைப் பார்த்து, "நண்பா, முன்பு உன்னை அடித்த அதே மனிதர் வந்துகொண்டிருக்கிறார். அவரைப் பார்த்தால் பாம்பு பிடிக்கும் வித்தைக்காரராகத் தெரியவில்லை. அதனால், இப்போது உன் வீரத்தைக் காட்டலாம்" என்றது ஆமை.

சீறிக் கொண்டே அந்த மனிதரை நோக்கிப் பாய்ந்தது நாகம். நடுங்கிப் போன அவர், அதனிடமிருந்து தப்பி வேகமாக ஓடத் தொடங்கினார். அதைப் பார்த்து வயிறு குலுங்கச் சிரித்தன ஆமையும் நாகமும். "அன்று என்னைக் கொல்ல வந்தவர், இப்போது என்னைக் கண்டு நடுங்கி ஓடுகிறார்" என்றது நாகம்.

"அன்று அவர் கையில் கம்பு இருந்தது. எட்ட இருந்தே உன்னை அடித்துவிடலாம். அது அவருக்குச் சாதகமான நிலைமை. இப்போது அவரிடம் எந்த ஆயுதமும் இல்லை. உன்னை நெருங்கினால் கடித்து விடுவாய். அதனால் அவர் தப்பித்து ஓடவேண்டி இருக்கிறது. இது உனக்குச் சாதகமான நிலைமை" என்றது ஆமை.

"நீ எல்லாமும் தெரிந்து வைத்திருக்கிறாயே!" என்றது நாகம்.

"ஆம், ஒருவருக்குச் சூழ்நிலை சாதகமாக இல்லாதபோது என்னைப் போல் சுருட்டிக் கொண்டு அடங்கி இருக்க வேண்டும். சாதகமாக இருக்கும்போது உன்னைப்போல் சீறிப் பாயவேண்டும்.

ஒருவனின் பலம், பலவீனம் இரண்டையும் பார்த்துத்தான் சண்டைக்குச் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் இதை அவசியம் நினைவில் கொள்ள வேண்டும்" என்றது ஆமை. "நீ அறிவாளிதான்!" என்று பாராட்டியது நாகம். "புரிந்துகொண்டால் சரிதான்" என்ற ஆமையுடன் சேர்ந்து நாகமும் சிரித்தது.

## பொன்மொழிகள்

- சீருடன் கச்சிதமாகவும் கண்ணியமாகவும் இருப்பதற்கு பணம் அதிகம் தேவைப்படாது. - மகாத்மா காந்தி
- செல்வங்களின் சுமையை ஏற்றிக் கொண்டு இன்பம் எனும் செங்குத்துப் பாதையில் ஏறிச் செல்வது ஒரு மனிதனுக்குக் கடினம் - முகம்மது நபிகள்
- தேவைக்கு மிஞ்சிய பொருள் வைத்திருப்பவன் பிறர் பொருளைப் பறித்தவன் - புனித அகஸ்தினார்
- பணத்தின் பலன் அனைத்தும் அது பயன்படுவதில்தான் இருக்கிறது- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்
- பணத்தை உங்கள் தெய்வமாக்கிவிட்டால், அது சைத்தான் போல உங்களை ஆட்டிப் படைக்கும் - ஹென்றி ஃபீல்டிங்
- கடன் வாங்குதல் பிச்சையெடுப்பதைவிடக் கீழானது - லெஸ்ஸிங்
- தேவைக்கு மேலுள்ள பொருள் தேவையில்லாதவற்றை வாங்கவே பயன்படும் தோரோ
- விலை குறைந்தது என்ற ஒரே காரணத்திற்காக வேண்டாத பொருள்களை வாங்காதே - ஆஸ்கார் ஒயில்ட்
- சிந்தனை இல்லாத படிப்பு, பயனில்லாத உழைப்பு, படிப்பில்லாத சிந்தனை இவை மூன்றும் ஆபத்தானவை - ஆண்டர்சன்
- பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன் - வேட்லி
- நாளை என்பது சோம்பேறிகளின் தினமாகும் - பாபு ராவ்
- திறமை தானாக வராது நாம்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும் - ஹேஸ்டர் பீல்

## தம்பிக்கு அறிவுரை!

பொய்யும் புரட்டும் இங்கே
பரவிக் கிடக்குது தம்பி - அதை
பகுத்தறிவுச் சிந்தனையால் நீ
களைந்திட வேண்டும் தம்பி!

புரட்டன்கள் கூறும் பேச்சை நீ
புறம் தள்ளுதல் வேண்டும் தம்பி!
புத்தகம் பல புரட்டிப் பல புதிய
உண்மைகளை அறிந்திட வேண்டும் தம்பி!

புதிய சிந்தனைகளைச் செய்திட நீ
பல நாட்டு நூல்களை, கலைகளைக்
கற்றிட வேண்டும் தம்பி!

புதுமை வேண்டும் என்றால் தெளிவினை
அறிதல் வேண்டும் தம்பி!
உன் பண்பை மாண்பை காக்கும்
புதுமையை ஏற்றிட வேண்டும் தம்பி!

மடைமை போற்றும் பழைமைதனை
முற்றும் அழித்திட நீ
விழைதல் வேண்டும் தம்பி!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.08 04

- 1860 - இலங்கையின் ஆளுநராக சேர் சார்ல்ஸ் மக்கார்த்தி நியமிக்கப்பட்டார்.
- 1964 - ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமை ஆர்வலர்களான மைக்கல் ஷ்வேர்னர், ஆண்ட்ரூ குட்மன், ஜேம்ஸ் சானி ஆகியோர் மிசிசிப்பியில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். இவர்கள் ஜூன் 21 இல் காணாமல் போயிருந்தனர்.
- 1975 - மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஜப்பானிய செம்படையினர் AIA கட்டடத்தைத் தாக்கி அமெரிக்கத் தூதுவர் உட்பட 50 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். பின்னர் இப்பணயக் கைதிகளை விடுவித்து சிறைக் கைதிகளாகவிருந்த தமது 5 தோழர்களுடன் லிபியா பயணமாகினர்.
- 1987 - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன் முதலில் மக்கள் முன் தோன்றி உரையாற்றினார்.
- 2006 - நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியானந்த் அறிவிக்கப்பட்டார். இவர் ஒகஸ்ட் 23 இல் பதவியேற்றார்.
- 2006 - ஈழத்துக் கலைஞர் பொன்.கணேசமூர்த்தி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2006 - வறுமைக்கு எதிரான அமைப்பு (Action Fiam) என்ற அரச சார்பற்ற அமைப்பின் 15 பணியாளர்கள் மூதூரில் இலங்கை இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.
- 2007 - நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் செவ்வாய்க்கோளை நோக்கி ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1929 - வேலூர் ஜி.ராமபத்ரன், தமிழக மிருதங்கக் கலைஞர் (இ. 2012)
- 1929 - கிஷோர் குமார், இந்திய நடிகர், பாடகர் (இ. 1987)
- 1935 - நா.தர்மராஜன், தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்
- 1950 - ந.ரங்கசாமி, புதுச்சேரியின் 9 ஆவது முதலமைச்சர்
- 1960 - சோழியான், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புகள்

- 2006 - பொன். கணேசமூர்த்தி, ஈழத்துக் கலைஞர்
- 2006 - நந்தினி சத்பதி, இந்திய அரசியல்வாதி, எழுத்தாளர் (பி. 1931)
- 2008 - ச.அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (பி. 1929)

### சிறப்பு நாள்

- புரட்சி நாள் (புர்கினா பாசோ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 80 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 90 | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 250 | 400 | 250 |
| தக்காளி | 160 | 100 | 100 | 110 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 200 | 100 | 160 | 100 | 160 | 180 |
| கரட் | 200 | 120 | 280 | 220 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 40 | 80 | 100 |
| புடோல் | 60 | 100 | 80 | 60 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 95 | 120 | 110 |
| பாகற்காய் | 200 | 150 | 160 | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 40 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 120 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 90 | 60 | 40 | 80 | 40 |
| லீக்ஸ் | 250 | 140 | 160 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 200 | 140 | 110 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 180 | 280 | 220 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 60 | 80 | 30-40 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 210 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 45 | 80 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 15 | 20 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 40 | 50 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 200 | 140 | 130 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 150 | 120 | 100 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 50 | 30 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | 120 | 50 | 30 |

நல்ல காரியத்தை செய்ய நினைக்கின்றவர் ஒருபோதும் ஏமாறுவதில்லை.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராமரின் கால்பட்டால்தான் அகலிகைக்கு சாப விமோசனம்

அகலிகையை கல்லாகக் கடவாய் என சாபம் கொடுத்த கௌதம முனிவர்; அந்தச் சாபத்தை நீக்க தசரத மைந்தன் இராமன் வருவான் என்று கூறினார்.

கல்லாய் கிடக்கும் அகலிகை எதற்காக இராமனின் கால்பட்டு சாப விமோசனம் பெற வேண்டும் என்ற விடயம் இன்றுவரை விவாதத்துக் குரியதாகவே உள்ளது.

இதை நாம் கூறும்போது, இம்... ஆரம்பித்து விட்டார் என்று சிலர் நினைப்பதும் நமக்குத் தெரிகிறது.

இருந்தும் இதிகாசங்களும் காப்பியங்களும் மனித வாழ்வை நெறிப்படுத்தவும் வாழ்வின் தத்துவத்தை உணரவைப்பதற்குமானதென்பதே உண்மை.

ஆகையால்தான் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களுடன் எங்கள் வாழ்வியலை தொடர்புபடுத்திக்கூற முனைகின்றோம்.

அந்தவகையில்தான் இராமனின் கால்பட்டு அகலிகை சாபவிமோசனம் பெற்ற கதையை இவ்விடத்தில் பிரஸ்தாபித்தோம்.

இராமன் மிதிலைக்கு வருகிறான். அவனை விசுவாமித்திரர் அழைத்து வருகிறார். வரும் வழியில்; கௌதம முனிவரின் சாபத்தால், கல்லாகிக் காலம் கடந்து காத்துக் கிடக்கிறாள் அகலிகை.

சாபம் நீங்க வேண்டுமென்றால் இராமனின் கால் அந்தக் கல்லில் பட்டாக வேண்டும். உரிய காலத்தில் அது நடந்தாகிறது. இதற்கான காரண காரியம் என்ன என்பது கௌதம முனிவருக்குக் கூடத் தெரியாதிருக்கலாம்.

இப்படித்தான் பல விடயங்கள் நடந்தாகின்றன. இவற்றின் பின்னணியில் இறைசக்தியும் எங்களால் புரிந்து கொள்ள முடியாத மெய்யியலும் உள்ளிருப்பதுதான் உண்மை. இதை அறிவதுதான் மெய்யறிவு.

இவை ஒருபுறமிருக்க, இப்போது வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலர் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

இந்தக் கடுமை என்பது அவரவர் சார்ந்த குணவியல்புகள்; அவர்கள் அங்கம் பெற்றுள்ள அரசியல் கட்சிகள்; எதிர்காலத்தில் அவர்கள் இணைய எதிர்பார்க்கும் அரசியல் அமைப்புக்களின் கொள்கைகள்; தென்பகுதி அரசியல் செல்வாக்கின் தூண்டுதல்கள் என்பவற்றின் தன்மைக்கேற்ப அமைந்திருப்பதைக் காண முடியும்.

இங்கு நீதியரசர் விக்னேஸ்வரனை அரசியலுக்கு அழைத்து வந்தவர் இரா.சம்பந்தர் அவர்கள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதாவது இராமரை மிதிலைக்குக் கூட்டி வந்தது விசுவாமித்திரராயினும் இராமனின் கால்பட்டால்தான் கல்லாய் கிடக்கும் அகலிகையின் சாபம் நீங்கும் என்பது விதி.

இந்த விதியை மாற்றி என் கால்பட்டாலும் அகலிகையின் சாபம் நீங்கும் என்று இராமரைக் கூட்டி வந்த விசுவாமித்திரர் கர்ச்சித்தால் அது தவறு.

இதைச் சொல்வதற்காக விசுவாமித்திரரின் கால்பட்டு அகலிகை சாப விமோசனம் பெற்றால் அதற்கு நாம் எதிர்ப்பு என்பது பொருளல்ல.

என்ன செய்வது! இராமரின் கால்பட்டால் தான் கல்லாய் கிடக்கும் அகலிகையின் சாபம் நீங்கும் என்பது எழுதப்பட்டு விட்டது.

நிலைமை இதுவாக இருக்க, இராமரைக் கூட்டி வந்தவர் விசுவாமித்திரர். எனவே விசுவாமித்திரரின் கால்பட்டுத்தான் அகலிகையின் சாபம் நீங்க வேண்டும். இல்லையேல் இராமர் அந்தக் கல்லை மிதிக்கக்கூடாது என்று யார் கூறினாலும் அது இயற்கைக்கு மாறானது.

ஆக, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை எதிர்த்து தமிழ் மக்களின் கோபத்துக்கு ஆளாகின்ற அந்த ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்துக்களுடன் ஒத்துப்போய் அவற்றை ஆதரித்தால் இவர்களின் அரசியல் தோசங்களும் சாபங்களும் நீங்கும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

# தடைசெய்யப்பட்ட தொழில்களை தடுத்து நிறுத்தி மீனவர்களின் தொழிலுக்கு உறுதுணையாக இருப்போம்

## இரண்டாவது நாள் போராட்டத்தில் மாவை எம்.பி

(கண்டாவளை)

தடைசெய்யப்பட்ட தொழில்களை தடுத்து நிறுத்தி பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத் தொழில்களை அவர்கள் சரியாக முன்னெடுப்பதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோதத் தொழில் முறைகளையும் தடை செய்யப்பட்ட தொழில்களையும் தடுத்து நிறுத்தக்கோரி முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததுடன், நேற்று முன்தினம் முதல் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் முன்பாக இரண்டாவது நாளான நேற்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பி னர் மாவை சேனாதிராசா தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகள் மற்றும்சிலிண்டர்கள் வைத்து மீன்பிடிப்பது மின்சாரம் பாவித்து மீன்பிடித்தல் டைனமற் பாவித்தல் போன்ற அனுமதிக்கப்படாத முறையிலான சட்டவிரோதத் தொழில்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இந்த மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்த கடற்றொழிலாளர்கள் இப்போது மட்டுமல்ல போர்க்காலத்திலும் ஆழிப்பேரலை அனர்த்தத்திலும் இராணுவ கெடுபிடியிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இப்போது இவ்வாறான சட்டவிரோதத் தொழில்களால இவர்களது தொழில் பாதிக்கப்படிருக்கின்றது. இதனால் அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற கடற்றொழிலாளர்களுடன் நேற்று மேற்கொண்ட கலந்துரையாடலில அவர்கள், தடை செய்யப்படட தொழில்முறைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதை முற்றுமுழுதாக தடைசெய்ய வேண்டும் என்று அவர்கள் எங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.

இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோது, கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜித முனி சொய்சாவுடன் நான் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் இந்த விடயம் பற்றி அறிந்திருப்பதாகவும் எதிர்வரும் எட்டாம் திகதி தமிழதேசியக்கூட்டமைப்புஉறுப்பினர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில மீனவர்களுடன் பேசுவதற்காகவும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் அறிவதற்காகவும்தான் முல்லைத்தீவுக்கு வரவுள்ளதாகவும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தன்னாலான முழு முயற்சிகளை .எடுப்பதாகவும் இதன்போது தெரியப்படுத்தினார்.

தடைசெய்யப்பட்ட தொழிலகளை தடுத்து நிறுத்தி பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத் தொழில்களை அவரகள் முன்னெடுப்பதற்கு நாங்கள் உறுதுணை யாக இருப்போம் என பாராளு மன்ற உறுப்பினர் மேலும் தெரிவிததுள்ளார்.(2-281,315,)

## மகோற்சவம் ஆரம்பம்

கோண்டாவில் கிழக்கு அருள்தரு கேணியடி காளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று 10ஆம் நாள் ஆடிப்பூரத் தினத் தன்று தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது. (ம-78)

# முல்லை. நீரியல் வளத்திணைக்கள அலுவலகப் பணிகள் முடக்கம்

### பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட கடற் தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் முன்பாக மீனவர்கள் முன்னெடுத்து வரும போராட்டத்தை அடுத்து குறித்த அலுவலகத்தின் பணிகள் முடக்கப்பட்டுள்ளதுடன், அலுவலகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பகுதியில் மேற் கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மற்றும் அனுமதியற்ற தொழில்களால் ஐயாயிரத்து 160 மீனவர்களினுடைய வாழ்வாதாரத் தொழில் பாதிக்கப்படுவதாகவும் இவ்வாறான தொழில்களை தடை செய்யக்கோரி நேற்று முன்தினம் முதல் மீனவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டதைத்தொடர்ந்து குறித்த பகுதியில் ஒரு பதற்றமான சூழல் ஏற்பட்டதுடன், அலுவலகத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் முதல் அலுவலக நடவடிக்கைகள் முற்றாக முடங்கியதுடன், நேற்று அலுவலகத்திற்கு முழுமையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (2-315)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பல்லி விழுதலின் பலன்கள்**

ஸ்தனம் - பாப சம்பவம்
மார்பு - தனலாபம்
வயிறு - தான்யலாபம்
நாபி - ரத்னலாபம்
தொடைகள் - பிதா அரிஷ்டம்
முழங்கால்கள் - சுபம்
கணுக்கால்கள் - சுபம்
பாதம் - பிரயாணம்
ப்ருஷ்டம் - சுபம்
நகங்கள் - தனநாசம்
இடக்கை - துயரம்
வலக்கை - துக்கம்
முதுகு - நாசம்
கால்விரல்கள் - பயம்
இடக்கை விரல்கள் - துயரம்
வடக்கை விரல்கள் - ராஜபயம்
தேகத்தில் ஓடல் - தீர்க்காயுள்

(தொடரும்)

# மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் மனவளக்கலை அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த வாரத்துக்கான மனவளக்கலை பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 0212222772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உங்கள் உடல், மனம், அறிவு இம்மூன்றையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள். அவற்றை மனதிற்குள் திணிக்காதீர்கள்.
- வஞ்சனையால் எதையும் சாதிக்க முடியாது. அன்பாலும், உண்மையாலும் பெரிய செயலைக் கூட எளிதாகச் செய்து விட முடியும்.
- பரந்த உலகில் பிறந்த நீங்கள், அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால், உங்களுக்கும் கல்லுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.
- பயமின்மையே வாழ்வின் ரகசியம். நமக்கு என்ன நேருமோ என்று ஒருபோதும் பயப்படவேண்டாம். பிறரிடம் இருந்து வரும் உதவியை மறுக்கின்ற அந்த கணமே சுதந்திரம் வந்துவிடும்.
- நியாயமான கோபம் என்ற ஒன்று உலகில் இல்லை. ஏனெனில், அனைத்தையும் சமமாகக் காணத் தவறுவதால் தான் கோபமே உண்டாகிறது.
- எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள். நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.





கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தேசிய ரீதியில் சாதனை படைத்த வீரர்களுக்கான கௌரவிப்பு கல்லூரியின் விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் இ.சிவலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் கல்லூரியின் பொன் சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவியுமான திருமதி ஜெயமோகன் இராஜேஸ்வரி கலந்து மாணவர்களை கௌரவித்தார். (க)



அரியாலை சனசமூகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஊரேழு றோயல் மோதியது. இரு போட்டியில் அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுபெற்றதால் வெற்றியினை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது பாடும்மீன் அணி. (க-106)

# நவசக்தி அணியை வென்றது நவஜீவன்ஸ்





பருத்தித்துறை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் 2018 ஆம் ஆண்டிற்கான மாபெரும் உதைபந்தாட்ட நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இளைஞர்களின் விளையாட்டு திறன்களை ஊக்குவிப்பதோடு சிறந்த கள வாய்ப்புக்களை உருவாக்கும் எத்தனிப்பாகவும்,வடமராட்சி இளைஞர் அணியின் வேண்டுகோளுக்கிணங்கவும் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆதரவுடன் இப்போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

முதல்மூன்று இடங்களை பெறும் அணிக்கு முறையே 75 ஆயிரம், 50ஆயிரம், 25ஆயிரம் ரூபா வழங்கப்படுவதோடு, பெறுமதியான வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டு விவசாய பிரதி அமைச்சரினால் கௌரவிக்கப்பட உள்ளனர்.

நிகழ்வின் முதலாவது போட்டியாக நவ சக்தி விளையாட்டுக்கழகமும், நவ ஜீவன்ஸ் விளையாட்டுகழகமும் மோதியிருந்தது.

போட்டி யில் 1-0 என நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தது.

நிகழ்வில் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் கந்தையா வைத்தியநாதன், பாலரமேஸ்,பருத்தித்துறை சுதந்திர கட்சியின் அலுவலக இணைப்பாளர் செல்வதீசன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர் (க-30-60)

# மைக்கலின் அபார கோல்கள்; வவுனியா வோரியர்ஸ் வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

லீக் சுற்றின், 43 ஆவது போட்டி கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா வோரியர்ஸ் அணியை எதிர்த்து முல்லை பீனிக்ஸ் அணி மோதியது.

போட்டி தொடங்கிய முதல் வவுனியா வோரியர்ஸ் அணி அபார ஆட்டம் ஆடியது.

அவ்வணியின் என், மைக்கல், 31, 49, 63, 69 மற்றும் 70 ஆவது நிமிடங்களில் கோல் மழை பொழிந்தார். முடிவில் வவுனியா வோரியர்ஸ் அணி, 05:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம் ரி.சி.சி.அணி 2வது சுற்றுக்கு தகுதி

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது போட்டி கடந்த வாரம் நடைபெற்றபோது, ரி.சி.சி.அணி ஸ்ரான்லி அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 22.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.



சத்தியபிரசன்னா- 14, மதன்- 27, கண்ணராஜ்- 10, துஸ்யந்தன்- 12, விஷ்ணு- 12, ஓட்டங்களைப் பெற்றனர். பிரபு-2, அனுரதன்-2, ராஜ்- 5 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி.அணி 19.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. லவகாந்- 13, பிரபு-37, விதுண்- 55 ஓட்டங்களைப் பெற்றனர். துஸ்யந்தன்-1, விதுஸன்- 3, மதன்- 02 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவுக்கு (Rating) ரி.சி.சி. அணி 5.41 புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 1.98 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி கயிறு இழுத்தலில் வடமாகாணம் மூன்றாமிடம்



கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 30வது தேசிய இளைஞர் விளயாட்டு விழாவின். ஒருபகுதியான தேசிய ரீதியிலான கயிறிழுத்தல் போட்டிகள் மகரகம இளைஞர் சேவைகள் மன்றத்தின் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில், யாழ்.மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட பன்னாலை கணேசன் இளைஞர் கழக பெண்கள்அணிவெவ்வேறுமாவட்டங்களோடு போட்டியிட்டு இறுதியில் சில வீராங்கனைகளின் உபாதை காரணமாக 8 வீராங்கனைகள் பங்கு பற்றும் போட்டியில் எதிர் அணியினர் 8 வீராங்கனையோடும் பன்னாலை இளைஞர் கழக வீராங்கனைகள் 7 பேரினை கொண்ட அணியாக 3 ஆம் இடத்துக்கு போட்டியிட்ட பெண்கள் அணியினர் 3 ஆவது இடத்தை பெற்றுள்ளார்கள்.

சென்ற வருடமும் 3 ஆம் இடத்தினை கைப்பற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)



புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அமரர் சி. அரியகுட்டியின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி 25:11, 25:19, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற் களையும் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக் தகுதி பெற்றது.

## அமைதியும் சமாதானமும்...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பொது நலவாய செயலாளர் நாயகம் பட்ரிஸியா ஸ்காட்லாண்ட் எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று பாராளுமன்றிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் செயலாளர் நாயகத்தை தெளிவுபடுத்திய எதிர்க்கட்சி தலைவர், ஆயுத போராட்டம் முற்று பெற்றிருந்தாலும் முழுமையான அமைதியும் சமாதானமும் மக்களிடையே இல்லை என்பதனை சுட்டிக் காட்டினார்.

மேலும் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் மக்கள் குறிப்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில் பாரிய எதிர்பார்ப்புக்கள் காணப்பட்டன.

அரசாங்கம் சர்வதேச மட்டத்திலும் நாட்டு மக்களிற்கும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

பிராந்தியங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் அரசாங்க கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு புதிய அரசியல் யாப்பு, உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுதல், நஷ்ட ஈடு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகள், படையினர் கைவசமுள்ள பொது மக்களின் காணி விடுவிப்பு, மிக கடுமையான பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விடுதலை போன்றன அவ்வாறான வாக்குறுதிகளில் சிலவாகும்.

எனினும் இவை தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை எனவும் வலியுறுத்தினார்.

புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதிலும் இத்தகையான ஒரு பொருத்தனை உள்ளதனை வலியுறுத்திய எதிர்க்கட்சி தலைவர், புதிய அரசியல் யாப்பினை உருவாக்கும் பிரேரணையானது பாராளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, ஆனால் ஒரு சில அரசியல் காரணங்களின் நிமித்தம் இதனை முன்னெடுத்து செல்வதில் அரசாங்க தரப்பில் தாமதங்கள் காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும், இந்த நாடு பாரிய யுத்தம் ஒன்றிற்கு முகம் கொடுத்தமைக்கு காரணங்கள் உள்ளன என்பதனை சுட்டிக்காட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர், ஒருவர் உறுதியாக இல்லாதவிடத்து இப்பிரச்சினையை கையாள முடியாது என்றும், கடும்போக்காளர்களின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி இவற்றினை ஒருவர் கைவிடமுடியாது என்றும் கூறிய இரா.சம்பந்தன், அரசாங்கமானது உறுதியாக நின்று நாட்டினை சரியான பாதையில் நடத்த வேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார்.

மேலும் புதிய அரசியல் யாப்பின் உருவாக்கமானது நாட்டினை முன்னேற்ற பாதையில் இட்டுச்செல்லும் மிகப் பாரிய ஒரு கருமமாகும் என்பதனையும் வலியுறுத்தினார்.

இலங்கையில் ஜனநாயக மேம்பாடு, சட்ட ஒழுங்கு, நல்லாட்சி மற்றும் சூழல் மாசடைதலை தவிர்த்தல் உள்ளடங்கலான பல விடயங்களில் பொதுநலவாய செயலகத்தின் பங்களிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரை தெளிவுபடுத்திய செயலாளர் நாயகம், புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கு தமது பணியகம் தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் மிதமான தமது செயல்களின் மூலம் சமாதானத்திற்கான ஒரு தூதுவராக இரா.சம்பந்தன் இருப்பதனையும் செயலாளர் நாயகம் பாராட்டினார்.

இந்த நாட்டில் நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தினையும் ஏற்படுத்துவதற்கு தனது முழுமையான பங்களிப்பு இருக்கும் என்பதனை வலியுறுத்திய இரா.சம்பந்தன், பொதுநலவாயம் உள்ளடங்கலான சர்வதேச சமூகத்திற்கும் இலங்கையில் நிரந்தர சமாதானத்தினை நிலைநாட்டுவதில் பங்குண்டு என்பதனையும் வலியுறுத்தினார். (ம)

## கொழும்பில் துப்பாக்கி...

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்கள் வெளிவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## 194 பட்டதாரிகளுக்கு...

பெறவுள்ளது.

வட மாகாண பொதுசேவை ஆணைக் குழுவினால் கடந்த 2018.06.19 நடந்த திறந்த போட்டிப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 353 விண்ணப்பதாரர்கள், கடந்த 2018.07.17, 18ஆம் திகதிகளில் வட மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையுடன் இணைந்த பிரத்தியேக பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 194 பேருக்கு நாளை ஆசிரிய நியமன கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கலாசார உடையுடன் நாளை 2 மணிக்கு பொதுநூலக மண்டபத்துக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் (தே.அ.அ) சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பான விபரங்களை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பணிப்புறக்...

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு முழுவதும் இந்த போராட்டத்தை மேற கொண்டது.

இந்நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில், மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தம் காரணமாக வெளி நோயாளர் பிரிவு மருத்துவ சேவைகள் முடங்கின.

இதன் காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வருகை தந்த நோயாளர்கள், மாதாந்த கிளினிக் பரிசோதனைக்கு வந்த நோயாளர்கள் என பலரும் சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்பி யுள்ளனர். (ம)

## வீடொன்று...

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த வாள்வெட்டுக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டு தப்பித்த போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் துரத்திச் சென்றனர். எனினும் கும்பல் ஓடித் தப்பித்தது.

கும்பல் பயணித்த காரின் சக்கரம் ஒன்று காற்றுப் போனதால் அதனை வீதியில் கைவிட்டு கும்பல் தப்பித்தது. இந்த நிலையிலேயே காரை கொடிகாமம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கார் வாடகைக்கு கொடுக்கப்பட்டதாக உரிமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் நேற்று அதிகாலை கொடிகாமம் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவத்தில் மிருசுவில் வடக்கு வீதியைச் சேர்ந்த தம்பு ஜெயானந்தன் (வயது 57) படுகாயமுற்றநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், மிருசுவில் ஆயத்தடியைச் சேர்ந்த பாலேந்திரன் றஜீபன் (வயது 23) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-9,30)

## காற்றின் வேகம்...

மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மன்னாரிலிருந்து காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகள் மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக கல்முனை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன், அவ்வேளைகளில் அக் கடற்பரப்புகள் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம)

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 03/08/2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 261 |

வெற்றி எழுத்து: N | சுப்பர் இலக்கம்: 05 | வெற்றி இலக்கங்கள்: 16 47 68 73

தேசிய லொத்தர் சபை

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## சபை நிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்டஅட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசியபோட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டடநிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதிசுற்றறிக்கை, இல.04/2016 (i)ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாகமட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையானதகைமைகள், கேள்விஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை06.08.2018-20.08.2018 வரையானகாலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 06.08.2018ம் திகதியில் இருந்து 20.08.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாதகட்டணமாக ரூபா. 2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 21.08.2018ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77நாட்களுக்கு (06.11.2018வரை) செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழேஅட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

10. கேள்வி தொடர்பானமுன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 14.08.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த காலம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/01/ CF(B)/2018/58 | Construction of Waste Water Treatment plant at Kakaithivu | 13.36 | 4 | C6 | 140,000.00 | 04.12.2018 |
| 2 | JMC/WD/01/ CF(B)/2018/59 | Construction of Kallundaively Internal Fencing work | 2.58 | 3 | C8 | 26,000.00 | 04.12.2018 |

ஆணையாளர்,
பிராந்தியபெறுகைகள் குழுத் தலைவர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

03.08.2018

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.08.03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1840 |

ஆங்கில எழுத்து: D | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 05 13 33 77

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/08/03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3716 |

ஆங்கில எழுத்து: N | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 3 2 2 6 9

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2018-08-03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 31 |

ஆங்கில எழுத்து: D | வெற்றி இலக்கங்கள்: 12 43 53 56

தேசிய லொத்தர் சபை

## மணிவண்ணனுக்கு...

வெள்ளிக்கிழமை இடைக்காலத் தடை விதித்துள்ளது.

2017ஆம் ஆண்டு வாக்காளர் பதிவின் போது, உறுப்பினர் மணிவண்ணன் யாழ் மாநகர சபை எல்லையில் வதியவில்லை என மனுதார்ரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றுரைத்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் அடங்கிய அமர்வு, மனுதாரரால் கோரப்பட்ட இடைக்கால நிவாரணமான இந்த வழக்கு தீர்ப்பளிக்கப்படும் வரை மணிவண்ணன் சபை அமர்விலோ, வாக்களிப்பிலோ பங்கேற்பதற்கு முடியாது என இடைக்காலத் தடை உத்தரவினை பிறப்பித்துள்ளது. (ம-9)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (6256)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**மணமகன் தேவை**
1982, மூல நட்சத்திர, செவ்வாய் குற்ற மற்ற, கிரகபாவம் - 58 உடைய அரச உத்தியோகம் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. விவாகரத்து பெற்றவர். சைவ போசனம் விரும்பத்தக்கது. அரச, தனியார் தொழில்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
**0779485383** (6219)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-3398)

**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினி லப்டொப்கள் திருத்தி தருகிறோம்
அழையுங்கள் 0779086737
GUNA BEST PC COMPUTER REPAIR
திருத்தம் விற்றல் வாங்குதல்
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

# பணி நிலை வேண்டுகை
- புத்தகம் கட்டுனர் (பைண்டிங்)
- நேரச்சு (Offset) பழகுனர்கள்

முன்னனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் நேரில் வரவும்.

(06.08.2018 திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்)
காலை 10 மணி தொடக்கம்
மாலை 3 மணி வரை நேரில் வரவும் (C-3433)

* நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.

**Harikanan** Printers of the North
1st Floor, K.K.S. Road, Jaffna.

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை
(C-3397)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி, மன்னார்.
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

O/L உடன் 6 மாதத்தில்
வீட்டுக்கு எந்தச் செலவும் இல்லாமல்
விரும்பிய நாடு செல்லும்
செல்லும் ஏற்பாட்டுடன்
**ஹொட்டேல் பயிற்சி**




(C-3422)
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார்
முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில்
**வேலைவாய்ப்புடன் விசா**
26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா ஏற்பாட்டுடன் வேலைவாய்ப்பு
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கனடா விசா
வேலைவாய்ப்பு விசாக்கள், ஏற்கனவே விசா வென்றவர்களின் விபரங்களை நேரில் பார்வையிட்டு விண்ணப்பம் செய்யலாம்!
10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
www.sikaram.lk
0777 324 004
021 221 9 221
SIKARAM ACADEMY
221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

# VISA SERVICES
நீங்கள் விரும்பும் நாட்டினை நேர்மையாக குறுகிய காலத்தில் சென்றடைய இன்றே WIN STAR உடன் இணையுங்கள்

CANADA | UK | AUSTRALIA | GERMANY
SWISS | FRANCE | ITALY | NORWAY

- 100% வீசா உத்தரவாதம்.
- குடும்பமாகவும் செல்ல ஏற்பாடுகள்.
- செலுத்தும் பணம் மற்றும் காலப்பகுதிக்கு எழுத்து மூலமான ஒப்பந்தம்.
- வங்கி நிலுவை ஏற்பாடுகள்.
- அங்கீகாரம் பெற்ற விரிவுரையாளர்களினால் சிறந்த ஆங்கில வகுப்புகள்.

STUDENT VISA | BUSINESS VISA | VISIT VISA
SKILL MIGRATION | SPOUSE VISA

மேலதிக விபரங்களுக்கு முன்னனுமதி பெற்று நேரில் வரவும்
**021 300 4641**
5 வருடகால தமிழ் மக்களின் நம்பிக்கை
அலுவலக நேரம் 11 am - 4 pm

**WINSTAR CONSULTANTS (PVT) LTD**
45, Vembadi Street, Jaffna.
www.winstarjaffna.com (5241)

*Direct Importers of Motor Vehicles*
**SMART KINGS (PVT) LTD**
JAPAN நேரடி வாகன இறக்குமதியாளர்




(C-3423)
TOYOTA SUZUKI NISSAN MITSUBISHI HINO CAT ISUZU
Tel: 021 221 6999 Hotline: 077 375 4040
No.12 Point Pedro Road, Jaffna. [வேம்படிச் சந்திக்கு அருகாமையில்]


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.